# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 27 வெள்ளிக்கிழமை (13-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:253

# புதிய அரசு அமைக்க ரத்னசிறிக்கு அழைப்பு!

## ஈ.பி.டி.பி. முழு ஆதரவு

கொழும்பு,ஒக்ரோபர்13

**புதிய அரசாங்கத்தை அமைக்குமாறு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மூத்த தலைவரும், இப்போதைய பிரதமருமான ரத்னசிறி விக்கிரமநாயக்காவுக்கு ஜனாதிபதி சந்திரிகா நேற்று அழைப்பு விடுத்தார்.**



செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியே அதிக ஆசனங்களைப் பெற்றதாலும்- ஈ.பி.டி.பி. அரசு அமைக்க முழு ஆதரவு வழங்க உறுதியளித்ததாலும் -

ஜனாதிபதி ரத்னசிறி விக்கிரமநாயக்காவுக்கு புதிய அரசு அமைக்குமாறு அழைப்பு விடுத்ததாக, தகவல் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்கா நேற்றிரவு 8.30 மணிக்கு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதினோராவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற போதிலும், அதன் முடிவுகள் நேற்று நண்பகல் 12.23 மணிக்கே தேர்தல் ஆணையாளரால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டன. பிரதான கட்சிகளான பொ.ஐ.முன்னணிக்கோ, ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அறுதிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதனால் இரண்டு கட்சிகளும் உதிரிக் கட்சிகளின் ஆதரவைப் பெறும் முயற்சியில், பேரம் பேசுதலில் ஈடுபட்டன.



(10ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூரில் கலவரம் தொடர்கிறது

மட்டக்களப்பு,ஒக்.13

மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தோல்வி அடைந்ததை அடுத்து காத்தான்குடி மற்றும் ஏறாவூர் பகுதிகளில் நேற்றுமுன்தினம் மாலை வெடித்த கலவரங்கள் நேற்றும் தொடர்ந்தன.

முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான இந்தக் கலவரங்களினால் நேற்றுக்காலை வரை காத்தான்குடிப் பகுதியில் வசிக்கும் ஐ.தே. கட்சி ஆதரவாளர்கள் இருவரும், முஸ

(10ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலுக்கே கூடுதல் விருப்பு வாக்கு!



கொழும்பு,ஒக்.13

கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க பெற்ற வாக்குகளே, நடந்து முடிந்த தேர்தலில் ஒரு தனிநபர் பெற்ற ஆகக்கூடிய விருப்பு வாக்குகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க கொழும்பு மாவட்டத்தில் 3லட்சத்து 63ஆயி

(10ஆம் பக்கம் பார்க்க)

# கட்சிகளின் ஆதரவை பெற ஐ.தே.க. முயற்சி!

கொழும்பு,ஒக்.13

நாடாளுமன்றத் தேர்தலில் 89 ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியமைக்கும் வாய்ப்புக் குறித்து பல கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவைப் பெறுவதற்காக அந்தக் கட்சிகளின் தலைவர்களுடன் ஐ.தே. கட்சி தலைவர்கள் தொடர்பு கொண்டு கலந்துரையாடி வருகின்றனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# தெரிவான எம்.பிக்களின் விவரம் இன்று அறிவிப்பு

கொழும்பு,ஒக்.13

- கண்டி மாவட்டம் தவிர்ந்த ஏனைய 21 மாவட்டங்களுக்குமான விருப்பு வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டுள்ளன என்றும் - அவற்றின் உத்தியோகபூர்வ முடிவுகள் இன்று வெளியிடப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

இதன்படி ஒவ்வொரு அரசியல் கட்சி சார்பாகவும் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் விவரங்கள் இன்று காலை முதல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஊர்காவற்றுறைத் தொகுதியில் நடந்த வாக்களிப்பை ரத்துச் செய்ய வேண்டும்

## ஆணையாளர் நடத்திய கூட்டத்தில் வற்புறுத்து

நடந்து முடிந்த தேர்தலில் யாழ்.மக்களின் தீர்ப்பு நசுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஊர்காவற்றுறைத் தொகுதியில் தேர்தல் தினத்தன்று 'பயங்கரத்தின் ஆட்சியே' நிலவியது. அங்கு சுமார் 12ஆயிரம் வாக்குகள் முறைகேடாக செலுத்தப்பட்டுள்ளன. எனவே அந்தத் தொகுதியின் வாக்களிப்பை ரத்துச் செய்யவேண்டும்.

தேர்தல் ஆணையாளர் நேற்றுக் கூட்டிய கலந்துரையாடலில் ரெலோ முதல்வர் என். ஸ்ரீகாந்தா மேற்கண்டவாறு கோரினார்.

தேர்தல் ஆணையாளரின்

(2ஆம் பக்கம் பார்க்க)

## கட்சிகள் நிலைமை ஒரே பார்வையில்...

| கட்சிகள் | மாவட்டம் | தேசியபட்டியல் | மொத்தம் |
|---|---|---|---|
| பொ.ஐ.மு. | 94 | 13 | 107 |
| ஐ.தே.க | 77 | 12 | 89 |
| ஜே.வி.பி | 08 | 02 | 10 |
| த.வி.கூட்டணி | 05 | 00 | 05 |
| தே.ஐ.முன்னணி | 03 | 01 | 04 |
| ஈ.பி.டி.பி. | 04 | 00 | 04 |
| ரெலோ இயக்கம் | 03 | 00 | 03 |
| சிஹல உறுமய | 00 | 01 | 01 |
| தமிழ்க் காங்கிரஸ் | 01 | 00 | 01 |
| சுயேச்சைக் குழு (திகாமடுல்ல) | 01 | 00 | 01 |
| மொத்தம் | 196 | 29 | 225 |

## கட்சிகள் நிலைமை - 1994 பொதுத் தேர்தல்

| கட்சிகள் | மாவட்டம் | தேசியபட்டியல் | மொத்தம் |
|---|---|---|---|
| பொ.ஐ.மு. | 91 | 14 | 105 |
| ஐ.தே.க. | 81 | 13 | 94 |
| ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் | 06 | 01 | 07 |
| த.வி.கூட்டணி | 04 | 01 | 05 |
| ஸ்ரீலங்கா முன்னேற்ற.மு | 01 | 00 | 01 |
| புளொட் | 03 | 00 | 03 |
| சுயேச்சைக்குழு யாழ்(2) | 09 | 00 | 09 |
| சுயேச்சைக்குழு நுவரெ | 01 | 00 | 01 |
| மொத்தம் | 196 | 29 | 225 |

# அரசுக்கு ஆதரவு வழங்க கூட்டணி 2 நிபந்தனைகள்

கொழும்பு,ஒக்.13

அரசாங்கம் அமைக்கும் கட்சிக்கு ஆதரவு வழங்குவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி இரு நிபந்தனைகளை விதித்துள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான மாவை சேனாதிராசா உதயனுக்குத் தெரிவித்தார்.

★ மூன்றாம் தரப்பு உதவியுடன் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்கவேண்டும்.

★ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டும்.

இவையே தமிழர் விடுதலைக் கூட்டணி விதித்துள்ள நிபந்தனைகளாகும்.

மாவை சேனாதிராசா மேலும் தெரிவிக்கையில், புதிய அரசாங்கம்

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஆட்சி மாற்றம் ஒன்றுக்காக வெளியே இருந்து ஆதரவு!

## ஜே.வி.பி. கூறுகிறது

எந்தவொரு கட்சிக்கும் அரசமைக்க ஆதரவு வழங்கமாட்டோம். எனினும் ஆட்சி மாற்றம் ஒன்றுக்காக வெளியிலிருந்து ஆதரவு வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்று ஜே.வி.பி. பிரசாரச் செயலர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 10 ஆசனங்களைப் பெற்று மூன்றாவது சக்தியாக வந்துள்ள ஜே.வி.பி எந்தக் கட்சிக்கு ஆதரவு வழங்கப்போகின்றது என்று அவரிடம் கேட்டபோதே இப்படி அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தற்போது நடத்தப்பட்ட தேர்தல் நீதியாக நடத்தப்படவில்லை. எனவே தேர்தலுக்கு எதிராக நீதிமன்றம் செல்லவுள்ளோம்.

எந்தக்கட்சி அரசமைத்தாலும் அமைச்சு பதவிக்கோ எந்தவித சலுகைக்கோ அவர்களிடம் மண்டியிடமாட்டோம் - என்றார்.

# பௌசியை வெளியேற்றுமாறு தே.ஐ.முன்னணி கோருகிறது

## ஆதரவு அளிப்பதற்கு நிபந்தனை

கொழும்பு,ஒக்.13

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்குவதற்கு தேசிய ஐக்கிய முன்னணி பல நிபந்தனைகளை விதித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

முன்னைய அரசில் அமைச்சராக இருந்த ஏ.எச்.எம். பௌசிக்கு அமைச்சரவையில் இடமளிக்கக் கூடாது என்பது அவர்களின் முக்கிய நிபந்தனை ஆகும்.

தேசிய ஐக்கிய முன்னணி விதித்துள்ள ஏனைய நிபந்தனைகள் வருமாறு:-

★தேர்தல் தினத்தன்று கண்டியில் இடம்பெற்ற வன்செயல்கள் குறித்து ஆராய ஆணைக்குழு ஒன்று அமைக்க வேண்டும்.

★கிழக்கில் முஸ்லிம் மக்கள் நலன்களைப் பாதுகாக்க தனி மாவட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

★அமைச்சரவையில் தே.ஐ. முன்னணிக்கு மூன்று அமைச்சுகள். வழங்கவேண்டும். (இ-3)

## 22 தமிழ் எம்.பிக்கள் தெரிவு

கொழும்பு,ஒக்.13

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கு, மலையகம் உட்பட நாடு முழுவதிலுமிருந்து 22 தமிழ் எம்.பிக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் மூன்று உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி. சார்பில் 4 உறுப்பினர்களும், தமிழ்க் காங்கிரஸ், ஐ.தே.க சார்பில் தலா ஒரு உறுப்பினருமாக ஒன்பது உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வன்னி மாவட்டத்தில் ரெலோ சார்பில் 3உறுப்பினர்களும், ஐ.தே.க. சார்பில் ஒருவரும் -

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீமாவோவின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்கு

மறைந்த முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் பூதவுடல் ஹொரகொல்லவில் உள்ள அவரது வாசஸ்தலத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

நேற்று நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்ட அவரது பூதவுடலுக்கு பிரதமர் உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் மறைவை ஒட்டி இன்றும்,நாளையும் துக்கதினமாக அரசினால் உத்தியோக பூர்வமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. (இ-8)

## சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு,ஒக்.13

கொழும்புத்துறை,எழுதுமட்டுவாழ், அரியாலை ஆகிய பகுதிகளில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாய்க்கிழமை மோட்டார் தாக்குதல்களை நடத்தியதில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; நான்கு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

விசேட ஊடகத் தகவல் நிலையம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளது. (இ-3)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## யோசப் சாமுவேல் அப்புத்துரை

*"உயிர்ப்பும் உயிரும் நானே*
*என்னில் விசுவாசம் கொள்பவன்*
*இறப்பினும் வாழ்வான்"*

13.09.2000 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த சாமுவேல் அப்புத்துரை அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடனடியாக உதவி புரிந்தோருக்கும் நல்லடக்க ஆராதனை நடத்திய சபைக் குருவுக்கும் எமக்கு ஆறுதலளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி:
*கற்கேணியடி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**
கடுக்காயடி வீதி,
நாயன்மார்கட்டு.

(79425)

# கண்ணீர் அஞ்சலி



நர்வேலி வடக்கைச் சேர்ந்த சமூக சேவையாளரும்
கொடைவள்ளலும் சிவதர்மவள்ளலுமான

## கந்தையா பரமநாதன்

அவர்களின் இழப்பு கிராமத்துக்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் இதற்காக எமது தேவஸ்தானத்தார் பெரிதும் வருந்துகின்றனர்.

**செல்லக்கதிர்காம சுவாமி தேவஸ்தானம்**
நீர்வேலி.

(C/13373)

# கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்

**தோற்றம்**
**1935 - 10 - 01**



**மறைவு**
**2000 - 10 - 09**

## அமரர் கந்தையா பரமநாதன்

(ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர் - ஹற்றன் நஷனல் வங்கி, கொழும்பு.)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியைத் தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரமநாதன் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்கள் கந்தையா - பொன்னம்மாவின் அன்பு மகனும், அமரர்கள் தியாகராஜா - அன்னம்மாவின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் (கிளி) அன்புக் கணவரும், பரமசாமி, பஞ்சலிங்கம், லங்காதேவி (லண்டன்), அமரர் கமலாதேவி, லக்குமிதேவி (லண்டன்), இராசபாக்கியம் (ஜேர்மனி), செல்வராணி (ஜேர்மனி), அமரர் சியாமளாதேவி, வத்சலாதேவி, நந்தினிதேவி, இராசரத்தினம் ஆகியோரின் சகோதரனும், பாலபூபதி (ஆஸ்திரேலியா), பூலோகராணி (கனடா), அமரர் ஜீவமணி, நாகம்மா (லண்டன்), லோகேஸ்வரி கனகலிங்கம் (கொழும்பு), சண்முகராஜா (கனடா), அமரர் யோகநாதன், கோவிந்தன் (லண்டன்), பற்குணம் (லண்டன்), லோகநாதன் (ஜேர்மனி), குணநாயகம் (ஜேர்மனி), சிவராஜா (ஹொலண்ட்), சந்திரநாதன் பாக்கியலக்ஷ்மி ஆகியோரின் மைத்துனரும், இராசையா, அமரர்கள் சிவலிங்கம், பூபாலசிங்கம், புனிதவதி (கொழும்பு), செல்வரஞ்சினி (கனடா) ஆகியோரின் சகலனும், பேரம்பலம், ருக்குமணியின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.10.2000) வியாழக்கிழமை 11 மணிக்கு இராசவீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாசிவன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*இராச வீதி,*
*நீர்வேலி.*

(C/13377)

**தகவல்:**
**மனைவி**

## சாரணியர் கலந்துரையாடல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.13

நாளை சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவிருந்த சிரேஷ்ட சாரணியர்களுக்கான விஷேட கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் -

கலந்துரையாடல் நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் -

மாவட்ட சிரேஷ்ட சாரணிய ஆணையாளர் திருமதி சிவராஜா அறிவித்துள்ளார். (இ-7)

## உதைபந்தாட்டம்

நல்லூர் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளைய ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**காலை**

★16 வயதுப்பிரிவு - யாழ்.இந்து எதிர் பெரியபுலம் ம.வி.

கனகரத்தினம் ம.ம.வி. எதிர் நல்லூர் இந்து தமிழ் வித்தி.

★18 வயதுப் பிரிவு - யாழ்.இந்து எதிர் செங்குந்த இந்து.

கனகரத்தினம் ம.ம.வி. எதிர் முத்துத்தம்பி ம.வி.

**மாலை**

பிற்பகல் 2 மணிமுதல்

★16 வயதுப்பிரிவு - கொக்குவில் இந்து எதிர் கோண்டாவில் பரஞ்சோதி

செங்குந்த இந்து எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ணா

★18 வயதுப்பிரிவு - கோண்டாவில் இந்து எதிர் முத்துத்தம்பி ம.வி (இ-3)

## கல்விச் செயலமர்வு

தென்மராட்சி,ஒக்.13

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரிய மத்திய நிலையம் ஏற்பாடு செய்துள்ள ஆசிரியர்களுக்கான தொடருறு கல்விச் செயலமர்வுகள் நாளை சனிக்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை இடைநிலை வகுப்புக்கான ஆங்கில மொழித்திறன் விருத்திச் செயலமர்வும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் இரண்டு தினங்களுக்கு விஞ்ஞான ஆய்வு கூட உபகரண உபயோகம் பற்றியசெயலமர்வும் நடைபெறவுள்ளன.

இதேவேளை ஆரம்பக் கல்விக்கான வகுப்பு மட்டக் கணிப்பீடும், அறிக்கைப்படுத்தலும் தொடர்பான செயலமர்வு நாளை சனிக்கிழமை கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் நடைபெறும் என தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

(இ-7)

---

## ஊர்காவற்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் ரெலோ சார்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே ஸ்ரீகாந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தீவுப்பகுதியில் வாக்களிப்பின் போது ஆயுதக்குழுவினரின் ஆட்சியே அங்கு நிலவியது. ஐ.தே. கட்சியைச் சேர்ந்த வாக்களிப்பு நிலைய முகவர்கள் 19பேர் ஈ.பி.டி.பி.யினரால் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு தாக்கப்பட்டனர். இதனால் பீதியடைந்த ஏனைய கட்சிகள், குழுக்களின் வாக்களிப்பு நிலைய முகவர்கள் தீவுப்பகுதிகளுக்குச் செல்லவில்லை. ஈ.பி.டி.பியினருக்கு ஒத்துழைக்கும் போக்கையே பொலீஸார் கொண்டிருந்தனர். இந்தத் தேர்தலில் யாழ்ப்பாண மக்களின் வாக்குகள் கடத்தப்பட்டிருக்கின்றன. அவர்களின் தீர்ப்பு நசுக்கப்பட்டிருக்கின்றது. பல நிலையங்களில் தமது உறுப்பினர்கள், ஆதரவாளர்களை வாகனங்களில் ஏற்றிச் சென்ற ஈ.பி.டி.பியினர் ஏராளமான கள்ள வாக்குகளை அவர்கள் மூலம் செலுத்தியுள்ளனர். எனதோ அன்றி எனது கட்சியினதோ நலன் கருதி நான் இதனை அம்பலப்படுத்தவில்லை.

யாழ்.மக்களின் வாக்குரிமை எவ்வாறு பறிக்கப்பட்டிருக்கின்றது என்பதை வெளிப்படுத்தவே இதனைக் கூறுகிறேன்-என்று ஸ்ரீகாந்தா அங்கு மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத் தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக ரெலோ சார்பில் அபு யூஸுப்பும் அங்கு விபரித்தார். (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## தம்பிப்பிள்ளை யேசுதாசன்

*நேற்றைய (12.10.2000) உதயனில் பிரசுரிக்கப்பட்ட மரண அறிவித்தல் சார்பாக அறியத்தருவது:-*

காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை யேசுதாசனின் பூதவுடல் நாளை (14.10.2000) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு (புதியநேரம்) அன்னாரின் இல்லத்தில் இருந்து யுவானியார் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி நிறைவேற்றி புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை எல்லோருக்கும் அறியத்தருகின்றோம்.

14/4 யுவானியார் கோவில் ஒழுங்கை
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/13374)

தகவல்:
**மனைவி**

## வைத்திலிங்கம் துரைராசா

தோலகட்டி வயாவிளானைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் துரைராசா (05.10.2000) வியாழக்கிழமை காலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - அன்னம் தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற கிறிஸ்தோபர் மற்றும் செல்லம் தம்பதிகளின் வளர்ப்பு மகனும், கந்தையா - இரத்தினம் தம்பதிகளின் மருமகனும், அதிசயராணியின்(சோதி) பாசமிகு அன்புக் கணவரும், சுரேஸ் (கொழும்பு), வினோதன், வினோதினி,இளங்கோ,நிக்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சின்னராசாவின் அருமை அண்ணனும், தங்கவேலு(ஜேர்மனி), கணேசமூர்த்தி(ஜேர்மனி), ஜெயந்திரன் (யாழ்.பல்கலைக்கழகம்), கணேந்திரன்(லண்டன்), ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ((14.10.2000) சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் உடுவில் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலைச் சந்தி,
மானிப்பாய்.

(79413)

தகவல்:
**சின்னராசா** (சகோதரன்)
**ஜெயந்திரன்** (மைத்துனர்)

## வைரமுத்து கந்தசாமி

(இளைப்பாறிய உத்தியோகத்தர்,
சுகாதாரசேவை திணைக்களம்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட வைரமுத்து கந்தசாமி நேற்று (12.10.2000) காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலம்சென்றவர்களான சுப்பிரமணியம், மயில்வாகனம், பொ.பாக்கியம், கோ.நாகரத்தினம் மற்றும் சரஸ்வதி, அருமைத்துரை, தனபாலசிங்கம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற இராமசாமியின் மைத்துனரும் மி.இராசேந்திரம், மி.விஜயபாலசிங்கம், க.இராமசாமி(இலண்டன்), காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், கையிலாயநாதன், கந்தையா ஆகியோரின் மைத்துனரும் கையிலையின்கிரி கையிலைமலைநாதனின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2000) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

(79426)

தகவல்:
**அன்னலட்சுமி** (மனைவி)

## வல்லிபுரம் வேலாயுதபிள்ளை

((முன்னாள் ஊழியர் - சிமெந்துக் கூட்டுத்தாபனம், K.K.S.)

வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ். வீதி, மடத்தடி தெல்லிப்பழையை வசிப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் வேலாயுதபிள்ளை (10-10-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - செல்லாச்சியின் அன்பு மகனும் செல்வராணியின் அன்புக்கணவரும் ராஜினி(யாழ்.மாநகரசபை சிக்கன கடனுதவி சங்க எழுதுவினைஞர்), கஜேந்திரன்(டோகா), ராஜேந்திரன் (வலி.வடக்கு பிரதேச சபை மின்சாரப்பகுதி ஊழியர்).ரஜனி ஆகியோரின் தந்தையும் கிருபாகரனின்(பிரான்ஸ்)அன்பு மாமனாரும் காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் இராஜேஸ்வரி, கந்தசாமி(ஓய்வு பெற்ற ஊழியர் பலாலி விமான நிலையம்) காலஞ்சென்ற முருகையா(யாழ்.சிறைச்சாலை ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராமு, செல்வராசா, சிவஞானேஸ்வரி, திலகவதி(யாழ்.சிறைச்சாலை உத்தியோகத்தர்) மகேஸ்வரி, பாலசுப்பிரமணியம்(கனடா), செல்வராசா(வலி.வடக்கு பிரதேசசபை கங்காணி), நந்தகுமார்(ஜேர்மனி), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14-10-2000) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S. வீதி,
சுன்னாகம் வடக்கு,
சுன்னாகம்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

(79420)

## திருமதி தில்லையம்பலம் இரத்தினம்

வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தில்லையம்பலம் இரத்தினம் நேற்று (12.10.2000) வியாழன் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம் கந்தையாவின் (பிரான்ஸ்) சகோதரியும் சந்தானலட்சுமி, நகுலேஸ்வரன்(பிரான்ஸ்), பரமேஸ்வரன்(பிரான்ஸ்), கலைச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும் சுந்தரலிங்கம், ஈஸ்வரி (பிரான்ஸ்), பார்வதி(பிரான்ஸ்), இளங்கோ(தலைவர், வேலணை தெற்கு விவசாய சம்மேளனம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2000)வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அம்பலவி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் வட்டாரம்,
வேலணை.

தகவல்
**பொ.இளங்கோ**
(மருமகன்)

(79427)

# சந்திரிகாவின் கரங்களைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் ஈ.பி.டி.பிக்கு உள்ளது

## கண்காணிப்பு பத்திரிகையாளர் கருத்து

ஈ.பி.டி.பி அமைப்பினர் தொடர்ந்தும் ஆயுதங்களை வைத்திருக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இதனால் இவர்கள் தொடர்ந்தும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கரங்களைப் பலப்படுத்துபவர்களாகவே இருப்பர்.

தேர்தல் கண்காணிப்பாளரும் பத்திரிகையாளருமான எஸ்.சிவகுருநாதன் வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் இரவு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா பதவியில் இருந்த சமயத்திலும் ஈ.பி.டி.பியினர் அவரின் கரங்களையே பலப்படுத்தினர். எனவே இன்றைய ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவதன் மூலம் தான் அவர்கள் தங்களது நிலைகளைத் தக்கவைத்துக் கொள்ள முடியும் என எண்ணியுள்ளனர்.

இப்படி எஸ்.சிவகுருநாதன் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

# திகாமடுல்ல தொகுதியில் பேரியல் அஷ்ரப் வெற்றி

மட்டக்களப்பு,ஒக்.13

அண்மையில் ஹெலி விபத்தில் உயிரிழந்த அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் மனைவியான பேரியல் அஷ்ரப் திகாமடுல்ல தேர்தல்மாவட்டத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

அஷ்ரப் உயிரிழந்த பின்னர் அவரது இடத்துக்கு பேரியல் அஷ்ரப்பை முஸ்லிம் காங்கிரஸ் நியமித்திருந்தது.

இந்தத் தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து அதன் சின்னத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டது.

இந்த ஏற்பாட்டின்கீழ் இருகட்சிகளையும் சேர்ந்தவர்கள் இணைந்து போட்டியிட்ட போதும் அமைச்சர் அஷ்ரப் நியமித்த நால்வரும் மட்டுமே தெரிவாகியுள்ளனர். ஏனையோர் தோல்வியடைந்தனர்.(ஐ-3-21)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ். குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்லப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 6ஆம் திகதிவரை) பதிவிலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

| | |
|---|---|
| 511/154534/A | 511/154534/B |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 512/140650/A | 512/144529/A |
| 512/144529/B | 512/144529/C |
| 512/144583/A | 512/144583/B |
| 512/144583/C | 512/147911/A |
| 512/150302/A | 512/154155/A |
| 512/156191/A | 512/156191/B |
| 512/156191/C | 512/156191/D |
| 512/156225/A | 512/156225/B |
| 512/156225/C | 512/156298/A |
| 512/156298/B | 512/156298/C |
| 512/156298/D | 512/156298/E |
| 512/156298/F | 512/156335/A |
| 512/156335/B | 512/156335/C |
| 512/156335/D | 512/156335/E |
| 512/156432/A | 512/156432/B |
| 512/156432/C | 512/156456/A |
| 512/156456/B | 512/156538/A |
| 512/156538/B | 512/156617/A |
| 512/156617/B | 512/156617/C |
| 512/156677/A | 512/156677/B |
| 512/159017/A | 512/159097/A |
| 512/159097/B | 512/159097/C |
| 512/159097/D | 512/159097/E |
| 512/159190/A | 512/159190/B |
| 512/159190/C | 512/159190/D |
| 512/159332/A | 512/159332/B |
| 512/159416/A | 512/159416/B |
| 512/159416/C | 512/159430/A |
| 512/159433/A | 512/159433/B |
| 512/159433/C | 512/160969/A |
| 512/160969/B | 512/160969/C |
| 512/160969/D | 512/160969/E |
| 512/160969/F | 512/160977/A |
| 512/160977/B | 512/160977/C |
| 512/161200/A | 512/161204/A |
| 512/161204/B | 512/161204/C |
| 512/161204/D | 512/161204/E |
| 512/161204/F | 512/161323/A |
| 512/161323/B | 512/161351/C |
| 512/161353/A | 512/161353/B |
| 512/161357/A | 512/161358/A |
| 512/161358/B | 512/161364/D |
| 512/161364/E | 512/161364/F |
| 512/161364/G | 512/161382/A |
| 512/161382/B | 512/161382/C |
| 512/161408/A | 512/161408/B |
| 512/161408/C | 512/161415/A |
| 512/163166/A | 512/163171/A |
| 512/163171/B | 512/163171/C |
| 512/163174/A | 512/163179/A |
| 512/163179/B | 512/163179/C |
| 512/163179/D | 512/163184/A |
| 512/163200/A | 512/163200/B |
| 512/163211/A | 512/163211/B |
| 512/163224/A | 512/163232/A |
| 512/163275/A | 512/163287/A |
| 512/163292/A | 512/163292/B |
| 512/163293/A | 512/163295/A |
| 512/163295/B | 512/163295/C |
| 512/163298/A | 512/163298/B |
| 512/163298/C | 512/163301/A |
| 512/163315/A | 512/163336/A |
| 512/163336/B | 512/163336/C |
| 512/163336/D | 512/163336/E |
| 512/163336/F | 512/163338/A |
| 512/163357/A | 512/163357/B |
| 512/163358/A | 512/163368/A |
| 512/163368/B | 512/163380/A |
| 512/163407/A | 512/163411/A |
| 512/163411/B | 512/163411/C |
| 512/163411/D | 512/163411/E |
| 512/163435/A | 512/163435/B |
| 512/163435/C | 512/163459/A |
| 512/163499/A | 512/163505/A |
| 512/163506/A | 512/163506/B |
| 512/163506/C | 512/163516/A |
| 512/163524/A | 512/163524/B |
| 512/163526/A | 512/163526/B |
| 512/163538/A | 512/163558/A |
| 512/163581/A | 512/163581/B |
| 512/163593/A | 512/163593/B |
| 512/163593/C | 512/163593/D |
| 512/163593/E | 512/163593/F |
| 512/163594/A | 512/163594/B |

### கோப்பாய்

| | |
|---|---|
| 511/144981/A | 511/145220/A |
| 511/145220/B | 511/153180/A |
| 511/154331/A | 511/154331/B |
| 511/154384/A | 511/154531/A |
| 511/154531/B | 511/154560/A |
| 511/154560/B | 511/154563/A |
| 511/154563/B | 511/154564/A |
| 511/157188/A | 511/157188/B |
| 511/157188/C | 511/157188/D |
| 511/157188/E | 511/157224/A |
| 511/157224/B | 511/157224/C |
| 511/157224/D. | 511/157224/E |
| 511/157239/A | 511/157239/B |
| 511/157248/B | 511/157248/C |
| 511/157252/A | 511/157252/B |
| 511/157252/C | 511/157252/D |
| 511/157252/E | 511/157256/A |
| 511/157271/A | 511/157271/B |
| 511/157273/A | 511/157287/A |
| 511/157287/B | 511/157287/C |
| 511/157430/A | 511/157430/B |
| 511/157480/A | 511/157490/A |
| 511/157495/A | 511/157495/B |
| 511/157499/A | 511/157499/B |
| 511/157673/A | 511/157673/B |
| 511/157673/C | 511/157673/D |
| 511/157682/A | 511/159587/A |
| 511/159587/B | 511/159591/A |
| 511/159591/B | 511/159733/A |
| 511/159739/A | 512/148023/A |
| 512/148023/B | 512/148023/C |
| 512/161351/A | 512/161351/B |
| 512/161407/A | 512/161407/B |
| 512/161407/C | 512/163165/A |
| 512/163165/B | 512/163165/C |
| 512/163165/D | 512/163165/E |
| 512/163253/A | 512/163366/A |
| 512/163501/A | 512/163501/B |

### மானிப்பாய்

| | |
|---|---|
| 511/145381/A | |

### நல்லூர்

| | |
|---|---|
| 511/144934/A | 511/144934/B |
| 511/144979/A | 511/144994/A |
| 511/144994/B | 511/144994/C |
| 511/144994/D | 511/156739/A |
| 511/156746/A | 511/156813/A |
| 511/156814/A | 511/156814/B |
| 511/156863/A | 511/156863/B |
| 511/156863/C | 511/156863/D |
| 511/157245/A | 511/157245/B |
| 511/157255/A | 511/157437/A |
| 511/157437/B | 511/157451/A |
| 511/157451/B | 511/157501/A |
| 511/157501/B | 511/157501/C |
| 512/142825/A | 512/147995/A |
| 512/147995/B | 512/147995/C |
| 512/152664/A | 512/156284/A |
| 512/156284/B | 512/156284/C |
| 512/156284/D | 512/156284/E |
| 512/156457/A | 512/156457/B |
| 512/156457/C | 512/156559/A |
| 512/156559/B | 512/156559/C |
| 512/156559/D | 512/159263/A |
| 512/159263/B | 512/159354/A |
| 512/159359/A | 512/159359/B |
| 512/159359/C | 512/159408/A |
| 512/160948/A | 512/160948/B |
| 512/160948/C | 512/160967/A |
| 512/160967/B | 512/161076/A |
| 512/161076/B | 512/161086/A |
| 512/161129/A | 512/161141/B |
| 512/161141/C | 512/161141/D |
| 512/161255/A | 512/161255/B |
| 512/161255/C | 512/161315/A |
| 512/161315/B | 512/161315/C |
| 512/161315/D | 512/161328/A |
| 512/161378/A | 512/161409/A |
| 512/161409/B | 512/161409/C |
| 512/161409/D | 512/163143/A |
| 512/163195/A | 512/163249/A |
| 512/163249/B | 512/163249/C |
| 512/163261/A | 512/163261/B |
| 512/163261/C | 512/163298/ |
| 512/163310/A | 512/163310/B |
| 512/163310/C | 512/163313/A |
| 512/163313/B | 512/163335/A |
| 512/163335/ | 512/163335/C |
| 512/163356/A | 512/163356/B |
| 512/163356/C | 512/163367/A |
| 512/163369/A | 512/163381/A |
| 512/163381/B | 512/163381/C |
| 512/163381/D | 512/163382/A |
| 512/163382/B | 512/163382/C |
| 512/163383/A | 512/163392/A |
| 512/163392/B | 512/163392/C |
| 512/163393/A | 512/163393/B |
| 512/163393/C | 512/163399/A |
| 512/163401/A | 512/163401/B |
| 512/163423/A | 512/163423/B |
| 512/163431/A | 512/163431/B |
| 512/163431/C | 512/163445/A |
| 512/163445/B | 512/163450/A |
| 512/163450/B | 512/163450/C |
| 512/163450/D | 512/163450/E |
| 512/163450/F | 512/163454/A |
| 512/163454/B | 512/163468/A |
| 512/163468/B | 512/163489/A |
| 512/163489/B | 512/163489/C |
| 512/163503/A | 512/163530/A |
| 512/163530/B | 512/163577/A |
| 512/163577/B | 512/163577/C |
| 512/163577/D | 512/163577/E |

### உடுவில்

| | |
|---|---|
| 511/144954/A | 511/144954/B |
| 511/144977/A | 511/144977/B |
| 511/145181/A | 511/154248/B |
| 511/156848/A | 511/157219/A |
| 511/157219/B | 511/157231/A |
| 511/157231/B | 511/157233/A |
| 511/157248/A | 511/157251/A |
| 511/157258/A | 511/157258/B |
| 511/157258/C | 511/157275/A |
| 511/157275/B | 511/157275/C |
| 511/157304/A | 511/157403/A |
| 511/157403/B | 511/157403/C |
| 511/157403/D | 511/157403/E |
| 511/157433/A | 511/157461/A |
| 511/157461/B | 511/157477/A |
| 511/157477/B | |

# நெடுந்தீவுக்கு மின் வழங்க ஜெனரேட்டர் கிடைத்தது

யாழ்ப்பாணம்,ஒக்.13

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட சகல பகுதிகளுக்கும் மின் வழங்கப்படவுள்ளது.

இதற்கென 250 கே.வி.வலுவுள்ள மின்பிறப்பாக்கி ஒன்று கடந்த சனியன்று அங்கு எடுத்து வரப்பட்டதாக நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம் தெரிவித்தார்.

மின்சார சபையைச் சேர்ந்த அதிகாரிகள், நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் உட்படப் பலர் அங்கு நடந்த வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த மின் பிறப்பாக்கி கடந்த சில மாதங்களுக்கு முன்னரே யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டிருந்தது. எனினும் யாழ். நகரப்பகுதி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் ஏற்பட்ட யுத்தநிலை காரணமாக படையினர் இந்த மின்பிறப்பாக்கியை எடுத்துச் சென்றிருந்ததாகவும் -

இது குறித்து ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மின்பிறப்பாக்கியை மீளப் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-7)


DMI யாழ் நகர்

A/L 2001 Day Class (Com.)

(I) ஆரம்பத் திகதியும் நேரமும்:- 16.10.2000 காலை 8 மணி.

(II) ஆசிரியர்கள் :- கணக்கீடு : D.SAM

வணிகக்கல்வி : பசில்

பொருளியல் : ஜெயக்குமார்

வ.புள்ளி &

பொது வினா : தவசேகர்

அளவையியல் : மோகன்

(III) பிரிவு :- தற்போது ஒரு பிரிவு மட்டுமே.

(C/13337) - நிர்வாகி.



வெங்காயம் புகையிலை ஏற்றுவோர் கவனத்திற்கு

தற்போது சீமெந்து இறக்கிக்கொண்டிருக்கும் 'கெந்தல' கப்பலில் வெங்காயம், புகையிலை போன்ற பொருள்களை ஏற்ற விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

ஜெசீபா ஏஜென்சி

132, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம். T.P : 2407

(C/13350)



முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த யோகேந்திரன் - மாலா தம்பதிகளின் செல்வப் புதல்வன்

HAPPY BIRTHDAY



யோ. நிவேதன்

தனது முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் இன்று (13-10-2000) வெள்ளிக்கிழமை வெகுவிமர்சையாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அன்பு அம்மா மற்றும் உற்றார், உறவினர்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

த. யோகேந்திரன்,
வலம்புரி அழகுமாடம்
வட்டுகோட்டை.

(79342)

# வாழ்த்துகின்றோம்

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின்
யாழ். மத்திய மாவட்ட, உதவி மாவட்ட
ஆணையாளராகச் சிறந்த சேவையாற்றிய

## "மணி ஓசை" உயர்திரு க. அருந்தவராஜா

அவர்கள் தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய யாழ். மத்திய மாவட்டத்தின் மாவட்ட ஆணையாளராகப் பதவிஉயர்வு பெற்றதைப் பெருமகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

## Mr. K. ARUNTHAVARAJAH

has been appointed to the rank of DISTRICT COMMISSIONER for Jaffna Central Region. He has been found to be an efficient and Capable officer, who is doing a tremendous work in spite of various obstacles. We understand how he devotes his time and energy to built the St. John Movement in the Jaffna Peninsula and how he serves the Community. in Considering his yoeman service he has been posted to the rank of DISTRICT COMMISSIONER.

N.H.Q. T. FAROOK JAYAH, EMT.
COLOMBO. BRIGADE ADMINISTRATION

மனிதம் நிறைந்த மக்கள் மாமணியே! ஒளிவிளக்கோடு, மணிஓசை கூடவே மாவட்ட ஆணையாளர் என மென்மேலும் பதவியுயர்வுகள் பலபெற்று மக்கள் சேவையில் வல்லமை மிக்க தலைவராகப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

த. கதிரமலை.
செயலாளர்.

பெற்றோர் குழுமச் சபை,
யாழ். மத்திய மாவட்டம். (79410)

# மரண அறிவித்தல்கள்

## துரைசிங்கம் முருகசேகரம்

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஹொலண்டில் வசித்தவருமாகிய துரைசிங்கம் முருகசேகரம் ஹொலண்டில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான துரைசிங்கம்—தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், ஜீவகுமாரியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும், தனுசனின் அன்புத் தந்தையும், தவகுமாரி, பங்கஜகுமாரி, ஸ்ரீரங்ககுமாரி, மோகனகுமாரி, தேசியநாதன் (ஊழியர், யாழ் மத்திய கல்லூரி), தனகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், துரைசிங்கம் (சைக்கிள் கடை), குணபாலா, சுப்பிரமணியம், சோதிராசா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஹொலண்டில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சகோதரன்: தேசியநாதன்
சகோதரிகள், மைத்துனர்மார்,
மருமக்கள்.

தற்காலிக முகவரி:
29/5, கச்சேரி நல்லூர் றோட். (79397)

## டானியல் முருகேசு வேதநாயகம்

வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட டானியல் முருகேசு வேதநாயகம் (இளைப்பாறிய சுகாதாரத் திணைக்கள அலுவலர்), அவர்கள் 2000 - 10 - 11 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டானியல், முருகேசு — நேசம் தம்பதிகளின் புதல்வரும், மேர்சி தங்கம்மாவின் அன்புக் கணவரும் டானியல் முருகேசு - நகுலாம்புசம் தம்பதிகளின் பெறாமகனும், யேசுராஜரஞ்சன் (அரசினர் வைத்தியசாலை, மந்திகை), சத்தியவதி, யேசுவரன், தவராஜா (அரசினர்வைத்தியசாலை, மந்திகை), இருபை நேசகுமாரி (றோயல் கல்லூரி, கொழும்பு), நேசகுமார் (இலங்கை வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் அருமைத்தந்தையும், புவனேஸ்வரி(அரசினர் வைத்தியசாலை, மந்திகை), தேவதாஸன் (கமலா வாச் வேக்ஸ், யாழ்ப்பாணம்), வசந்தி, தேவமோகன் (IFCO நுகே கொட), றேனோ, றேனிதா (மாதகல் சென்தோமஸ் பாடசாலை ஆசிரியை) ஆகியோரின் மாமனாரும், வேதாரணியம் (இளைப்பாறிய ஆசிரியர்), வேதாபரணம் (கிராம சேவையாளர்), கற்பநாயகம் (k. G fancy மந்திகை), வித்தியாதரன் (ஆஸ்திரேலியா), அருந்தவமலர் (சுவிஸ்), தேவாபரணம் (ஆஸ்திரேலியா), தேவநேசன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற விபுலானந்தன், தேவநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் 2000- 10- 11 புதன்கிழமை அன்று பி.ப. 4 00 மணியளவில் ஆலங்கட்டை மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

'அன்னம்',
வதிரி,
கரவெட்டி. (சி/13365)

## பிரதேச செயலரின் வாசஸ்தலமும் தப்பவில்லை

தென்மராட்சி, ஒக். 13

சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற ஷெல் வீச்சுக்கு தென்மராட்சி பிரதேச செயலரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமும் தப்பவில்லை. வீடு பலத்த சேதமடைந்ததுடன் உடைமைகளும் சேதமடைந்துள்ளன.

கடந்த சனிக்கிழமை பிரதேச செயலக உடைமைகளை மீட்டு வரச் சென்ற உத்தியோகத்தர்கள் பிரதேச செயலரின் வாசஸ்தலத்துக்குச் சென்று சேதமடைந்த நிலையில் காணப்பட்ட சில பொருள்களை மீட்டு வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## துப்பாக்கிகள் அபகரிப்பு

கொழும்பு, ஒக். 12

நுவரெலியாவில் ஹய எலிய கிறீஸ்தவக் கல்லூரி வாக்குச் சாவடியில் கடமையிலிருந்த பொலீஸாரின் துப்பாக்கிகளையும் ஆயிரத்து 200 வாக்குச் சீட்டுக்களையும் இனந்தெரியாத ஆயுதக் குழு ஒன்று பறிமுதல் செய்துள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

(ஐ-8)

## சிறிமாவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 13

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோபண்டாரநாயக்காவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். கிளை அலுவலகத்தில் நேற்று முழுநாளும் சோக இசை ஒலிக்கப்பட்டது.

அலுவலகம் முன்பாகக் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

(ஐ-5-173)

## தமிழ்க்காங்கிரஸ் நன்றி தெரிவிக்கிறது

யாழ்ப்பாணம், ஒக். 13

தமிழர் என்னும் இனஉணர்வோடு தலை நிமிர்ந்து நின்று தமிழ் காங்கிரஸுக்கு வாக்களித்த உங்கள் ஒவ்வொருவருக்கும் நாங்கள் தனித்தனியே நன்றி கூறுகின்றோம்.

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் தலைவர் அ. விநாயகமூர்த்தி வெளியிட்ட பத்திரிகைச்செய்திக் குறிப்பு ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலட்சியப்பற்றோடு எம்மை ஆதரித்த உங்கள் நல்வாழ்வுக்காக நாங்கள் தொடர்ந்து உழைப்போம். நீங்கள் தந்துள்ள வெற்றியானது எமக்குக் கிடைத்துள்ள பலம் என்றே கூற வேண்டும்.

சுதந்திர இலட்சியத்துக்கு எதிராக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் செய்யப்படும் பொய்ப்பிரசாரங்களை முறியடிப்போம். இடம்பெயர்ந்து அல்லல்படும் உங்கள் துன்பங்களுக்கு முடிவு காணும் வகையில் நாம் செயற்படுவோம்.

பணப்பலத்துக்கு நீங்கள் மண்டியிடவில்லை. அத்துடன் பொய் வாக்குறுதிகளுக்கு நீங்கள் செவிசாய்க்கவும் இல்லை. எனவே ஓர் உன்னத இலட்சியத்துக்காக வாக்குகளை அளித்தமையையிட்டு நீங்கள் பெருமைப்பட வேண்டும்.

தியாக மாமனிதர் குமார் பொன்னம்பலம் காட்டிய வழியில் நாம் தொடர்ந்தும் செயற்படுவோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

# உடன் தேவை

பெண்களுடைய சகல விதமான உடைகளையும் வெட்டித் தைக்கக்கூடிய நல்ல அனுபவம் உள்ள பெண் தொழிலாளர் தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

## நியூ ரெயிலேர்ஸ்

பிரதான வீதி,
பருத்தித்துறை. (சி/13371)

# அறிவித்தல்

## கைத்தொழில் வணிகர் மன்றம்,

சாவகச்சேரி.

இடம் பெயர்ந்த சாவகச்சேரி வணிகர்கள் தங்களின் கடைகளையும் உடைமைகளையும் பார்வையிடச்செல்வதற்கு நெல்லியடியில் இயங்கும் சாவகச்சேரி வணிகர் மன்றுடன் தொடர்பு கொள்ளவும்.

கைத்தொழில் வணிகர் மன்றம்,
சாவகச்சேரி.
(79428)

# அறிவித்தல்

தொழில் நுட்பக் கல்லூரி சான்றிதழ் பெற்று வேலையற்றிருப்போர் சங்கத்தில் பதிவு செய்தவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் வேலை பெற்றுச் சென்றுள்ளமையினால் ஏனைய அங்கத்தவர்களையும் இதுவரை பதிவு செய்யத் தவறியவர்கள்

மீள பதிவு செய்தலுடன்
15-10-2000 ஞாயிற்றுக்கிழமை 11.00 மணிக்கு
நாவலர் கல்லூரியில்
கூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

கு. பாலகுமாரன்
தலைவர்
(79408)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## பெரியசாமி கிருஷ்ணபிரியா

2000 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் அதி கூடிய புள்ளிகள் (161) பெற்றுக் கல்லூரியில் முதல் மாணவியாகத் திகழும் பெ. கிருஷ்ணபிரியாவைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த கல்லூரி அதிபர், வகுப்பாசிரியர் திரு. அகிலன், யாழ். கல்வி நிலைய நிர்வாகியும் ஆசிரியருமான திரு. சுபநாதன் யாவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் மேலும் பல்கலையும் கற்றுக் கல்வியில் சிரும் சிறப்புடன் திகழ வாழ்த்துகின்றோம்.

தனசிங்கம் குடும்பம்,
மரியதாஸ் குடும்பம்,
நெரபினா அக்கா.

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (79412)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்க அங்கத்தவர்
இ. வேலாயுதம்
அவர்களின் அன்புத் தந்தையார்

## துரையப்பா இராசையா

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின்குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவைக் கந்தன்
சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம்,
மாவிட்டபுரம்.
(79415)

# உதயன்

## பிராயச்சித்தம் என்ன?

தமிழ்ப் பிரதேசங்களில் — வடக்கு — கிழக்கில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் குறித்துச் சிறிதும் அக்கறை இல்லாமல் இருந்தவர்களைக் கூட அதிர்ச்சியுறவும் கவலை கொள்ளவும் வைத்திருப்பது திருகோணமலை மாவட்ட முடிவுகளாகும்.

தமிழர் தாயகத்தின் கேந்திர நகரமான திருகோணமலை உள்ளடங்கிய அந்த மாவட்டத்தை—அங்கு வாழும் தமிழ் மக்களை —பிரதிநிதித்துவம்— செய்ய ஒரு தமிழர் தானும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படவில்லை.

இலங்கையின் நாடாளுமன்றச் சரித்திரத்தில்— பிரிட்டிஷ்காரரிடம் இருந்து சுதந்திரம் கிடைத்ததாகச் சொல்லப்படும் காலத்தில் இருந்து—1947 இல் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் இருந்து — திருகோணமலை மாவட்டம் வாழ் தமிழ் மக்களைப் பிரதிநிதித்தும் செய்வதற்கு நாடாளுமன்றத்தில் ஆகக் குறைந்தது ஒருவரேனும் இருந்து வந்தார்.

திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டது மட்டுமன்றி, வளம் மிகுந்த பூமியும் ஆகும். தென்னிலங்கையின் அரசியல் தலைவர்கள் அதன் மீது ஒரு கண் வைக்கத் தொடங்கி—அபிவிருத்தித் திட்டங்கள், குடியேற்றத் திட்டங்களைத் தொடங்கி — தமிழர் நிலங்களை உத்தியோகபூர்வமாக அபகரிக்க ஆரம்பித்தனர்.

திருகோணமலை மாவட்டத்தை தமிழர்பிரதேசம் என்ற நிலையில் இருந்து, சிங்களவரைப் பெரும்பான்மையினராகக் கொண்ட மாவட்டமாக மாற்ற வேண்டும் என்ற இலக்கை முன்வைத்து அவர்கள் செயற்பட்டனர். அதனை அடையும் தறுவாயில் இன்றைய சிங்கள அரசியல் தலைவர்கள் உள்ளனர் என்பது தமிழருக்கு வந்துள்ள ஆபத்துக்களில் ஒன்று.

1988 ஆம் ஆண்டிலேயே திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் வாக்காளர்கள் 36. 4 சதவிதமாகவும், சிங்கள வாக்காளர்கள் 33. 6 சதவிதமாகவும் இருந்தனர், எனினும் விகிதாசார தேர்தல் முறையின் கீழ் ஒரு தமிழர் எம்.பியாக வர வாய்ப்பிருந்தது. 1994 தேர்தலிலும் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து தமிழர் ஒருவர் எம். பியானார்.

ஆனால் இம்முறை, திருகோணமலை தமிழர் பிரதிநிதித்துவத்தைஇழந்துவிட்டது.

தமிழ் அரசியல் கட்சிகளும் சுயேச்சைகளுமாக ஆறு அணிகள் திருகோணமலைத் தேர்தல் களத்தில் மோதியதாலேயே இந்தக் கேடு விளைந்தது. 1,500 வாக்குகள் குறைந்ததால் தமிழ்க் கட்சி ஒன்றுக்கு கிடைத்திருக்க வேண்டிய ஆசனம் தவறிப் போயிற்று. திருமலைத் தமிழர்களின் வாக்குகள் சிதறிப் போனதால் இந்த வினை. தமிழ் அரசியல்வாதிகளே இதில் முழுக் குற்றவாளிகளுமாவர்.

அங்கு போட்டியிட்ட தமிழ்க் கட்சிகள், அணிகள் தாம் பிரிந்து நின்றால் இத்தகைய கதி உண்டாகும் என்பதனை தெரியாது செயற்பட்டிருக்க முடியாது. தமது அரசியல் சுயநலத்துக்காக திருமலைத் தமிழ் மக்களின் நலனை விற்று விட்டார்கள் என்பதே வேதனைக்குரிய விடயம்.

அவர்களிடையே நிலவும் பிளவும் போட்டியும் பொறாமையும், திருகோணமலை மாவட்டம் தமிழர்களின் பிரதேசம் இல்லை என்று தென்னிலங்கையார் உரத்துக்கூறுவதற்கு வாய்ப்பளித்து விட்டது. தெற்குத் தலைவர்கள் தமது இலக்கை அடைவதற்கு இவர்கள் துணை போயிருக்கிறார்கள். இதற்காக தமிழ்த் தலைவர்கள் செய்யப் போகும் பிராயச்சித்தம்தான் என்ன?

---

எம். பிக்களுக்கு லஞ்சம் கொடுத்த வழக்கில்:

# நரசிம்மராவ், பூட்டாசிங் இருவருக்கும் 3 வருட கடூழியச் சிறைத் தண்டனை

## இந்திய நீதிமன்றம் தீர்ப்பு!!

புதுடில்லி, ஒக்ரோபர 13

**ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு லஞ்சம் வழங்கியதாக குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் மற்றும் முன்னாள் அமைச்சர் பூட்டாசிங் ஆகியோருக்கு தலா 3 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும், ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.**

1993ஆம் ஆண்டு ஜூலை மாதம் நரசிம்மராவ் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க ஜார்கண்ட் முக்தி மோர்சா என்ற கட்சியைச் சேர்ந்த 4 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பல லட்சம் ரூபாவை லஞ்சமாக வழங்கியதாக நரசிம்மராவ், பூட்டாசிங் ஆகியோர் மீது சிறப்பு நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன. இந்த வழக்கின் மீதான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

மேற்படி தீர்ப்பில் நரசிம்மராவ், பூட்டாசிங் ஆகியோருக்கு தலா 3 ஆண்டுகள் கடூழியச் சிறை மற்றும் 1 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அதேசமயம் அடுத்தமாதம் 8ஆம் திகதி வரை இருவருக்கும் இடைக்காலப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

லஞ்சம் வாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் மீது லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தொடரும்படியும்—

லஞ்சமாக வழங்கப்பட்ட பணத்தை பறிமுதல் செய்யும்படியும்—

நீதிபதிகள் தீர்ப்பில் உத்தரவிட்டுள்ளனர். (ஒ)



## காஷ்மீரில் 8 பேர் மரணம்

ஜம்மு, ஒக். 13

இந்தியாவின காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெற்ற வெவ்வேறு மோதல் சம்பவங்களில் 5 தீவிரவாதிகள் உட்பட 8 பேர் உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## உலக உணவு விருது இந்திய விஞ்ஞானிககு

வாஷிங்ரன், ஒக். 13

புத்தாயிரம் ஆண்டுக்கான உலக உணவு அபிவிருத்தி அமைப்பின் விருது இந்திய விஞ்ஞானி சுரேந்தர்வதாய், மெக்ஸிகோ நிபுணர் இவாஞ்சலினா ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்திய மரபணுக்கள் ஆய்வாளர் சுரேந்தாவதாய் புரதச்சத்தை அதிக அளவில் கொண்ட சோளப்பயிர் வகையை உருவாக்கியதற்காக விருது பெற தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

## வீரப்பனிடம் சரணடைந்ததாக

# தமிழக, கர்நாடக அரசுகள் மீது உச்ச நீதிமன்றம் குற்றச்சாட்டு!

புதுடில்லி, ஒக். 13

கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்ட விவகாரத்தில் சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பனிடம் தமிழக, கர்நாடக அரசுகள் பயந்து சரணடைந்துவிட்டதாக இந்திய உச்ச நீதிமன்றம் விமர்சனம் செய்துள்ளது.

நடிகர் ராஜ்குமார் உட்பட இருவரை பணயக் கைதிகளாக் கடத்திச் சென்றுவைத்துள்ள வீரப்பன் விதித்த நிபந்தனைகளில் ஒன்றான கர்நாடகச் சிறைகளில் வீரப்பனுக்கு உதவியதாக அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுவிக்கும் நடவடிக்கைக்கு தடை கோரும் மனுமீதான விசாரணையின் போதே உச்ச நீதிமன்றம் இரு மாநில அரசுகள் மீதும் குறை கூறியது

வீரப்பனின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் தமிழக, கர்நாடக அரசுகள் அவசரம் காட்டியிருப்பதாகவு —

அவை வீரப்பனிடம் பயந்து சரணடைந்துவிட்டதாகத் தோன்றுவதாகவும் — உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விமர்சனம் செய்துள்ளனர்.

இரு மாநில முதல்வர்களும் கடத்தல் விவகாரம் தொடர்பாக நடத்திய பேச்சுவார்த்தைகளின் விவரங்களை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு ஆணையிட்டுள்ள நீதிபதிகள் நடிகர் ராஜ்குமாரை மீட்க மாற்றுத் திட்டம் இருந்தால், அதனைத் தெரிவிக்கும்படியும் உத்தரவிட்டுள்ளனர். (ஒ-8)

## வீரப்பனைச் சமாளிப்பது சிரமம் என்கிறார் கிருஷ்ணா

கன்னட நடிகர் ராஜ்குமாரின் கடத்தல் தொடர்பாக சிரமமான சூழ்நிலையில் சிரமமான மனிதனைக் கையாள வேண்டி இருப்பதாகக் கர்நாடக முதல்வர் கிருஷ்ணா வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்

நேற்று பெங்களூரில் அவர் வெளியிட்ட அறிக்கையில், வீரப்பனிடம் தூது சென்றுள்ள 'நக்கீரன்' கோபால், பழ. நெடுமாறன் உள்ளிட்ட நால்வர் அணியினர் இந்தத் தடவை வெற்றியுடன் திரும்புவார்கள் என்று நம்புவதாகவும்—

வீரப்பன் குறித்த சிக்கலான பிரச்சினையை வேறு எந்த அரசும் இவ்வளவு திறமையாகச் சமாளிக்க முடியாதென்றும் —

தமிழக முதல்வர் கருணாநிதி தமக்கு முழு ஒத்துழைப்பு தருவதாகவும்— தெரிவித்துள்ளார்.

## வடகொரியா அழைப்பு

வாஷிங்ரன் ஒக்-13

தமது நாட்டிற்கு விஜயம் செய்யுமாறு வடகொரியா விடுத்த அழைப்பை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மெடலின் அல்பிரைட் ஏற்றுக் கொண்டுள்ளார்.

வடகொரியா தனி அரசாக உருவானதிலிருந்து அமெரிக்காவுடன் அந்த நாடுகொண்டிருந்த பகைமையை முடிவுக்குக் கொண்டுவரும் நடவடிக்கையாக இந்த அழைப்பு கருதப்படுகிறது.

## இஸ்லாமாபாத்துக்குள் செல்ல குல்சும் நவாஸுக்குத் தடை!

பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் மனைவி குல்சும் நவாஸ் தலைநகர் இஸ்லாமாபாத் நகருக்குள் செல்வதைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

நேற்று முன்தினம் பாகிஸ்தானில் பர்வேஸ்முஷாரபின் இராணுவ அரசு பதவியேற்ற ஒரு வருடப் பூர்த்தி கொண்டாடப்பட்டது.

அப்போது இராணுவ அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக குல்சும் நவாஸ் தமது ஆதரவாளர்களுடன் இஸ்லாமாபாத் நகருக்குச் சென்றபோது பொலிஸார் அவரையும் ஆதரவாளர்களையும் தடுத்து நிறுத்தித் திருப்பி அனுப்பியுள்ளனர். (ஒ-க)

## வீட்டுக்காவலில் குல்சும் நவாஸ்

இஸ்லாமாபாத் ஒக். 13

பாகிஸ்தானில் பதவிகவிழ்க்கப்பட்ட பிரதமர் நவாஸ் ஷெரீபின் மனைவி குல்சும் நவாஸை இராணுவஆட்சியாளர்கள் வீட்டுக்காவலில்வைத்துள்ளதாக அங்கிருந்து கடைசியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (ஒ)

## வாஜ்பாய்க்கு மீண்டும் சத்திர சிகிச்சை

மும்பை, ஒக்- 13

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு சில நாள்கள் கழித்து வலது முழங்காலில் சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக மருத்துவ நிபுணர் சித்தரஞ்சன் ரணாவத் தெரிவித்துள்ளார்.

வாஜ்பாய்க்கு இடது முழங்காலில மேற்கொள்ளப்பட்ட மூட்டு மாற்று சத்திரசிகிச்சைக்குப் பின்னர் தற்போது ஓய்வெடுத்து வருகிறார்.

## அரபு நாடுகளின் உச்சி மாநாடு

கெய்ரோ, ஒக 13

எதிர்வரும் 21 ஆம் திகதி அரபு நாடுகளின் உச்சி மாநாடு கெய்ரோவில் நடைபெற உள்ளது

இதனை முன்னிட்டு மூன்று அரபு நாடுகளின் பிரதிநிதிகள் இன்று கெய்ரோ செல்கின்றனர். (இ-8-9)

## நாளை

புரட்டாதி 28

சனிக்கிழமை

திதி: பிரதமை

பிற்பகல் 2 - 27 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி

முன்இரவு: 10. 04 வரை.

சுபநேரம்: 3 02—4 32

ராகுகாலம்: 9, 02— 10 .32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

வாழ்க்கைக்கு அடிப்படையானது எது என்பதைப் பற்றி அறிஞர்கள் ஆயிரமாயிரம் சொல்லட்டும், கவலையில்லை. வாழ்வில் நம்பிக்கை இல்லை என்றால் எதுவுமே இல்லை.

- நியூட்ஸின்

# வயிற்றோட்டநோய் பாதித்து மேற்கு வங்கத்தில் 37பேர்பலி!

இந்தியாவின மேற்குவங்க மாநிலத்தில் வேகமாகப்பரவி வரும் வயிற்றோட்ட நோய்க்கு 37 பேர் பலியாகியுள்ளனர். சுமார் ஒருலட்சம் மக்கள் இந்த நோயால் பாதிப்படைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சமீபத்தில் மாநிலத்தில் பெய்த பெரும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் பல இடங்களில் தேங்கியிருப்பதாகவும் —

அசுத்தமான வெள்ள நீர் குடி தண்ணீரில் கலப்பதால் மக்கள் வயிற்றோட்ட நோய்க்கு ஆளாவதாகவும்— கூறப்படுகிறது.

நோய் மேலும் பரவாமல் தடுக்கவும், பாதிப்படைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கவும் மேற்கு வங்க அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (ஒ-8)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கைமாறப்பட்டு விட்டது

09-10-2000 திங்கட்கிழமை அன்று இலக்கம் 787 பஸ்ஸில் முக்கிய ஆவணங்கள் அடங்கிய BAG ஒன்று கைமாறப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திரு. தி.அருட்செல்வம், கணனி விஞ்ஞானத்துறை, யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (79409)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-). தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி. 3081. (C/13122)

## படிவம்

தொழில்நுட்பக் கல்லூரிகளின் அனுமதிக்கான விண்ணப்பம் 2001 ஆம ஆண்டு விற்பனையாகின்றது. படிவம் அளவு 13"x 8" விலை ரூபா 2.50.மொத்த வியாபாரிகளுக்கு கழிவு உண்டு. பாரதி ,430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-3081 (C/13321)

## வக்கிர சனி பலாபலன்கள்

இன்று தொடக்கம் (13.10.2000) 11.04.2001 வரை உங்கள் இராசிக்கு வக்கிர சனீஸ்வரன் புரியப்போகும் பலாபலன்களை அறிந்துகொள்ள ஆசையுண்டா? எங்கும் விற்பனையாகின்றது. வேலணை சோதிடர். V.A. சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். (79399)

## பயிற்சி வகுப்பு

FABRIC PAINTING இரண்டு மாதங்களை கொண்ட துணிவர்ணமிடல் பயிற்சி வகுப்பு நடைபெறுகின்றது. ஆசிரியர்: செங்குந்தா வீதி (பாடசாலை முன்பாக), கல்வியங்காடு (79375)

## இலக்கியக் கட்டுரை

O/L மாணவர்களே, ஆசிரியர்களே "வீடற்றவன்" நாவல் கிடைக்கவில்லையா? கவலைப்படாதீர்கள வீடற்றவனுக்கு விளக்கம் எழுதியிருக்கிறார் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. உங்களுக்குத் தேவையான மற்றும் பல கட்டுரைகள் கொண்ட நூல் இலக்கியக் கட்டுரைகள். (79368)

## விற்பனைக்கு

எம்மிடம் வீடியோ படக்கொப்பிகள் விற்பனைக்கு உள்ளன. மொத்தமாக பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:- லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (79393)

## இலகு திருமணசேவை

1963 மிருகசீரிடம் கிரகபாவம் குறைந்த கனடாவில் Computer படித்து வேலை செய்பவருக்கு மணப்பெண் தேவை. Sponser உண்டு. விரைவில் இலங்கை வரவுள்ளார். சகல மணமக்களைத் தேர்வுக்கும் நாடுங்கள். ஞாயிறுகளில் துரை விமலா, K.K.S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (79394)

## புலிகள் மரணம்

கடந்த செவ்வாய் கல்வயல் பகுதியில் படையினருடன் இடம்பெற்ற மோதலில் தமது தரப்பில் உயிரிழந்த இருவரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் அறிவித்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

✪ கலைவாணன் (கதிரைவேலு தர்மசீலன் - யாழ்ப்பாணம்)

✪ கவியழகி (குமாரசாமி சுஜித்தா - கிளிநொச்சி)

இதேவேளை -

கடந்த செவ்வாய் கைதடிப் பகுதியில் இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் படுகாயமடைந்திருந்த சிறப்புஎல்லைப் படைவீரரான (பொன்னையா - ராசு - கிளிநொச்சி) என்பவர் நேற்று முன்தினம் உயிரிழந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

* * *

தொடரும் 'ஓயாத அலைகள்-4' நடவடிக்கையில் ரஞ்சன் (நாகரத்தினம் வன்னிராசா- திருகோணமலை) என்ற துணைப்படை வீரர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் தமது வானொலி மூலம் நேற்று முன்தினம் அறிவித்தனர்.

# வாழ்த்துகின்றோம்

### யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் சாதனை

2000 ஆம் ஆண்டுக்கான தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 47.2 சதவீத சித்தியைப் பெற்று யாழ். மாவட்டத்தில் முதலாவது இடத்தை *யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம்* பெற்றுள்ளது. இருவர் முதல் நிலைப்புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



**செல்வன் க. உமாசுதன்**
**பெற்ற புள்ளி 179**



**செல்வி மா.லாவண்யா**
**பெற்ற புள்ளி 177**

*சித்தி பெற்ற முழு மாணவர்களினதும் புள்ளி விவரங்கள் பின்வருமாறு*

| | பெற்றபுள்ளி | மாவட்டநிலை |
|---|---|---|
| 01. செல்வன் க.உமாசுதன் | 179 | 06 |
| 02. செல்வி மா.லாவண்யா | 177 | 08 |
| 03. செல்வன் சி.ஜெகன்நாத் | 167 | 48 |
| 04. செல்வன் க.சிவசாந்தன் | 161 | 102 |
| 05. செல்வன் செ.கௌசிகன் | 158 | 136 |
| 06. செல்வி யோ.அபிசேகா | 155 | 177 |
| 07. செல்வன் க.கவிதன் | 153 | 227 |
| 08. செல்வி ஆ.அனித்தா | 150 | 305 |
| 09. செல்வன் ந.சுஜீவன் | 147 | 384 |
| 10. செல்வன் அ.குகதாசன் | 147 | 384 |
| 11. செல்வி நா.சாந்தரூபி | 145 | 453 |
| 12. செல்வி செ.மதுரா | 141 | 580 |
| 13. செல்வன் இ.ஐங்கரன் | 141 | 580 |
| 14. செல்வி இ.வினோஜா | 138 | 688 |
| 15. செல்வன் த.சுகிர்ராம் | 137 | 724 |
| 16. செல்வன் சி.தனஞ்ஜயன் | 137 | 724 |
| 17. செல்வன் க.தினேஸ் | 135 | 809 |

மேலும் இப்பாடசாலையில் 13 மாணவர்கள் 104 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். அவர்களுள் இருவர் தேர்ச்சிப் புள்ளி மட்டத்தினை அணுகியுள்ளனர். மேலும் இப்பாடசாலையில் தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களும் கல்வி கற்றுப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்துள்ளனர். அவர்கள் பெற்ற புள்ளி விவரங்களும் பாடசாலைகளும் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. செல்வி சு.அபிராமி | 158 | *கிளிபளை மத்தியகல்லூரி.* |
| 2. செல்வி த.கெங்கா | 154 | *யா வீரசிங்கம் ம.ம.வித்தியாலயம.* |
| 3. செல்வன் கு.முரளி | 148 | *யா நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம்.* |
| 4. செல்வி சோ.பிருந்தா | 147 | *கிளிபளை மத்திய கல்லூரி* |
| 5. செல்வி அ.மனோசஜி | 147 | *யா வீரசிங்கம் ம.வித்தி.* |
| 6. செல்வன் பா.தினூபன் | 147 | *யா சாவகச்சேரி இந்து ஆரம்ப கல்லூரி.* |
| 7. செல்வி பா.நாகபூஷணி | 138 | *கிளிபளை மத்திய கல்லூரி* |

**அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பிகள்.**

(79384)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## சுகந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி A/L 97 வணிகப் பிரிவு)

இறைவன் பாதத்தில் வாடாத மலராகி...

**22-10-1978 13-10-1998**

**அகலுமா நெஞ்சை விட்டு?**

என்றென்றும் எங்கள் வானத்தில்
நின்று ஒளிமின்னும் நேசத்தாரகையே!
ஆயிரம் தவங்கள் நோற்றோம்!
ஐயிரண்டு திங்கள் சுமந்தோம்!
கண்களில் முள்ளை வைத்து
கண்மணி உன்னைக் காத்தோம்!
ஆண்டுகள் இரண்டு போகும்!
அகிலமும் உருண்டு போகும்!
ஆயினும் உந்தன் அன்பு
அகலுமா நெஞ்சை விட்டு
பாவிநாம் செய் தவங்கள்
பயனற்றுப் போனதேனோ?
ஆவிதான் போன பின்பும்
அகலுமா நெஞ்சை விட்டு?

உமது
அன்புஅப்பா, அன்புஅம்மா, அன்புத்தம்பிமார், அன்புத்தோழிகள.
அன்பு அம்மம்மா, அன்புத்தங்கைகள், உறவினர்கள்.
அன்புச்சித்தப்பா, அன்புச்சித்தி, அன்புமாமன்மார், ஆசான்கள்.

*419, பிரதான வீதி, கொழும்புத்துறை.* (79328)

# 6 ஆம் மாத நினைவஞ்சலி

மலர்வு 28 - 10 - 1930



உதிர்வு 13 - 04 - 2000

## திருமதி சின்னம்மா செல்லத்துரை

**(சீனியம்மா)**

(தண்ணீர்த் தாழ்வு, கட்டுவன்)

'அன்புமிகு தாயாய் பாரினிலே எமை வளர்த்து
வாழ வழிகாட்டிய எம் அன்பு அம்மாவே!
நீங்கள் ஓடி மறைந்தீர்கள் மாதம் ஆறாய்
எங்கள் மனதில் வீற்றிருப்பீர்கள் பல்லாண்டு!

உங்கள் பிரிவால் துயருறும்
**கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.*

(C/13364)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 05 - 07 - 1920



உதிர்வு 13 - 09 - 2000

## திருமதி இராசரத்தினம் மகேஸ்வரி

13-09-2000 அன்று இறைபதம் எய்திய எமது அன்புத் தாயாரின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறி எமது துன்பத்தில் பங்கு கொண்டோருக்கும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (13-10-2000) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பங்கு கொள்வதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
பிள்ளையார் கோயிலடி,
வடலியடைப்பு.

*சி.சிவபாலசுப்பிரமணியம்,*
*(பாப்பா)*
*சிவாஸ் ஸ்ருடியோ,*
*பண்டத்தரிப்பு.*
T.P 070-212574

(79254)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 - 07 - 1921



உதிர்வு 25 - 09 - 1999

## சின்னத்தம்பி நாகலிங்கம்

திதி: *13-10-2000*

**அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் தலைவனாய்
இருந்து எம் உயர்வுக்காய் உழைத்து நல்வாழ்வு
வாழ வழிகாட்டிய எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் ஓடி மறைந்தீர் ஓராண்டு
எங்கள் மனதில் வீற்றிருப்பீர் பல்லாண்டு.**

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

நிரந்தர முகவரி:
*சரசாலை வடக்கு,*
*சாவகச்சேரி.*

தற்காலிக முகவரி:
*ஈஸ்வரி இல்லம்,*
*நெல்லியடி.*

(79374)

# பாராட்டுகின்றோம்

யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில்
இசைக்கலைமணி பட்டம்பெற்ற

**பிரம்மஸ்ரீ கு. மதிவதண சர்மா**
**மரகதவல்லி அம்மா (மாலா)**

அவர்களைப் பாராட்டுகின்றோம்.

(8 - 10 - 2000 உதயனில் இசைக்கலைமணி என்பது இசைக் கலைமாணி என்று தவறுதலாக வெளியாகியிருந்தது)

(79200) —குடும்பத்தினர்

# வைத்தீஸ்வராவின் இதய அஞ்சலிகள்

எமது கொத்தணியின் கீழ் உள்ள வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தின் புகழ் பூத்த அதிபரும்
எமது கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியை

திருமதி கௌரி துரைராஜாவின்
அன்புக் கணவரும் ஆகிய

**ஐயாத்துரை துரைராஜா**

அவர்களின் அகால மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும், மனவேதனையும் அடைகிறோம். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்ம சாந்திக்காக வைத்தீஸ்வரனை வணங்குகிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.

(சி/13367)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
1944 — 05 — 05

இறப்பு
2000 — 09 — 13

**அமரர் காசிப்பிள்ளை சுந்தரலிங்கம்**

உடுவையூர் பிறந்து
கொக்குவிலில் வளர்ந்து
கொழும்பில் உம் முயிர் பிரிந்த
நின் பணி எப்படி மறப்போம்?

ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்
உற்றார், உறவினர், நண்பர்கள்

சேச் லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (79405)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
11 — 01 — 1952

மறைவு:
13 — 09 — 2000

**அமரர் சபாரெட்னம் சிறீகரன்**

எங்கும் நிறைந்து நின்ற எங்கள் அருமை
ஆருயிர்ச் செல்வமே!
நீ எங்களை விட்டுப் பிரிந்து சென்று விட்டாயே!
இனி உன் இன் முகத்தை என்று
காண்போமோ பராபரமே.
உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
வீரசக்தி விநாயகனை வேண்டுகின்றோம்.
உன் பிரிவால் துயருற்றிருக்கும்.

— குடும்பத்தினர்

திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (79341)

# வன்னியில் மாலதி நினைவு தினம்

வவுனியா, ஒக் 13

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரரான 2ஆம் லெப்ரினன்ட்மாலதியின் 13 ஆம்ஆண்டுநினைவு நாள் கடந்த செவ்வாயன்று வன்னியின் பல பிரதேசங்களிலும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டதாக வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இந்த நினைவு நாள் நிகழ்ச்சியில் மாணவர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நினைவுரைகள், எழுச்சிக் கூட்டங்கள், விசேட அணிவகுப்புக்கள், உருவப் படம் திரைநீக்கல் என்பன இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-8)

# 15 பேர் சாவகச்சேரி சென்றனர்

சாவகச்சேரி நகரப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்களும் பொதுமக்களுமாக 15 பேர் சாவகச்சேரியில் உள்ள தமது வர்த்தக நிலையங்கள், வீடுகளைப் பார்த்து வரவும் பொருள்களை மீட்டு வரவும் நேற்று முன்தினம் நண்பகல் 12 .00மணிக்குநெல்லியடியில் இயங்கும் சாவகச்சேரி வணிகர் மன்ற அலுவலகத்திலிருந்து இரண்டு வாகனங்களில் புறப்பட்டுச் சென்றனர்.

சாவகச்சேரிக்கு சென்றுவர பெருமளவு பொதுமக்களும் வர்த்தகர்களும் நெல்லியடிக்கு வந்த போதிலும் 15 பேர் மட்டுமே அழைத்துச் செல்லப்பட்டனர். (ஐ-117)

# ஸ்ரீ. ல. சு. கட்சியின் சுயேச்சைக்குழு நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

தேர்தலில் தனக்கு வாக்களித்த மக்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சுயேச்சைக்குழு - 3 நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

மேற்படி சுயேச்சைக் குழுவின் முதன்மை வேட்பாளரான வேல்முருகு தங்கராசாவும் ஏனைய வேட்பாளர்களும் விடுத்த அறிக்கையில் தமக்கு ஆதரவு அளித்த மாவட்ட மக்களுக்கும், கட்சித் தொண்டர்களுக்கும், கட்சியின் தேர்தல் பணிகளைச் சிறப்பாக நடத்தி முடித்த ஆதரவாளர்களுக்கும் தொண்டர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

# 135 பேருக்கு இலவசமாக கண்ணாடி

நெல்லியடி, ஒக். 13

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையின் அபிவிருத்திச் சபையும்—வடமராட்சி லயன்ஸ் கழமும் இணைந்து வடமராட்சிப் பகுதியில் கண் பார்வை குறைந்த 135 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கியுள்ளன.

இந்த வைபவம் கடந்த முதலாம் திகதி வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை மாவட்ட நீதிவான்எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் கண்ணாடிகளை, நோயாளிகளுக்கு அணிவித்தார்.

இந்த விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், வீதி அபிவிருத்தித் திணைக்கள பொறியியலாளர் லயன் க. சிவகுமார், வல்வை நகர சபைத் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம் உட்பட பலர் உரை நிகழ்த்தினர். [இ-109]

# இடம்பெயர்ந்தோருக்கான ஓய்வூதியம் வழங்கல்

தென்மராட்சி கிழக்குப் ப. நோ. கூ. சங்கக் கிராமிய வங்கியால் வழங்கப்படும் ஓய்வூதியங்கள் மாலுசந்திக்கும், வதிரிச் சந்திக்குமிடையிலுள்ள எமது கிளை இல. 2 இன் அலுவலகத்தில்

**16- 10- 2000, 17- 10- 2000**

ஆகிய திகதிகளில் வழங்கப்படும். தவறாது பெற்றுக் கொள்ளும்படி இத்தால் வேண்டப்படுகின்றீர்கள். மேற்படி திகதிகளில் ஓய்வூதியம் பெறத்தவறுபவர்கள் பின்னர் கொடிகாமத்தில் பெறவேண்டிய நிலை ஏற்படலாம்.

பொது முகாமையாளர்,
தென் கிழக்குப் ப. நோ. கூ. சங்கம்,
கொடிகாமம்

(சி/13366)

# ஆதரவுக்கு நன்றி

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில்
யாழ். மாவட்டத்தில் தமிழர் விடுதலைக்
கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களாக
நாம் தெரிவு செய்யப்பட்டமைக்கு
இக்கட்டான சூழ் நிலையிலும்
ஆதரவு நல்கிய

வாக்காளப் பெருமக்களுக்கும் எமது வெற்றிக்கு முன்னின்று உழைத்த குறிப்பாக கூட்டுறவுச் சமூகத்திற்கும், பொது நிறுவனங்களுக்கும் ஏனையோருக்கும் எமது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்றும் போல எதிர்காலத்திலும் உங்களோடு நின்று எமது இனத்திற்கும் எமது மண்ணுக்கும் எம்மால் ஆன சேவையை நாம் தொடருவோம்.

உங்கள் சேவையாளன்
**சி. சிவமகாராசா**

(79406)

யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்
மானிப்பாய்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பின்வரும் மாணவர்களையும்

| | | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 1. | செல்வன் ம கபிலன் | 177 |
| 2. | செல்வன் வி. கிஷோர | 151 |
| 3. | செல்வி சி. தர்சிகா | 150 |
| 4 | செல்வன் ச. இளங்குமரன் | 146 |
| 5. | செல்வன் ஜெ. தணிகைக்குமரன் | 140 |
| 6 | செல்வன் ம. தினேஷ்குமார் | 139 |
| 7. | செல்வன் இ. சுமன் | 139 |
| 8. | செல்வன் ச. அசோ | 139 |
| 9. | செல்வன் கோபிகிருஷ்ணா | 138 |
| 10 | செல்வன் அ. சுஜிந்தர் | 135 |

செல்வன் மயில்வாகனம் கபிலன் என்பவரின் சிறப்பான பாராட்டுக்குரிய விடயமெனில் அம் மாணவன் — 177 புள்ளிகளை பெற்றமையினால் யாழ் மாவட்டத்தில் 8 ஆவது இடமும சண்டிலிப்பாய் கோட்ட மட்டத்தில் முதன்மை மாணவனாக விளங்கியமை எமக்கு மகிழ்ச்சியைத் தந்துள்ளது

அத்தோடு வெட்டுப் புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற இரு மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு வேண்டிய சகல ஊக்குவிப்புக்களையும் திறம்பட அளித்த அதிபர் மிகவும் ஊக்கமுடன் அயராது உழைத்துப் பெருமை சேர்த்த வகுப்பாசிரியர்களான திரு. தி அருட்பிரகாசப்பிள்ளை அவர்களையும் திருமதி ரோகினி தவலிங்கம் அவர்களையும் கல்வியூட்டலில் ஏனைய ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியர்களையும் வாழ்த்தி பாராட்டி எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எல்லோருக்கும் எங்கள் சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் கருணை மிகுந்த அருளும் ஆசியும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(79411)

# அறிவித்தல்

உசன், மிருசுவில், விடத்தற்பளை, கொடிகாமம்,
வரணி மாணவர்களின் நலன் கருதி
தரம் 5 தொடக்கம் 11 வரையான வகுப்புகள்

**தனத்தின் வசந்தா கல்வி நிலையம்**

நெல்லியடியில் ஆரம்பமாகவுள்ளது.

இடம்: யங்றோயல்ஸ் கல்வி நிறுவனம்
விக்கினேஸ்வரா வீதி, நெல்லியடி.
(பெற்றோல் நிலைய முன்பாக)

காலம்: 16-10-2000 திங்கள் 8.00 மணி

எமது வழமையான ஆசிரியர் குழுவினால் நடத்தப்படவுள்ளது.

குறிப்பு: O/L பரீட்சை எழுதும் மாணவர்கள் நலன் கருதி ஒவ்வொரு பாடத்திற்கும் இரு ஆசிரியர் மூலம் பாடத்திட்டம் முடிக்கப்படும்.

(79181) - நிர்வாகி.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/ வட இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை

2000 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம்

| பெயர் | புள்ளி |
|---|---|
| 01. தர்மினி- பா | 166 |
| 02. றஜிதரன்- ச | 163 |
| 03 தாரணி- தி | 162 |
| 04. தமிழ்ச்செல்வி- ப | 158 |
| 05. லோகிதா- சி | 154 |
| 06. சயந்தன்- சி | 153 |
| 07. இத்தா- கோ | 152 |
| 08. நிதர்சன்- ஸ்ரீ | 152 |
| 09. ஜெருசன்- றா | 152 |
| 10. அஜந்தினி- ஆ | 151 |
| 11. நிருஷ்னி- ந | 149 |
| 12. சோபியா- கி | 149 |
| 13. யாதவன்- உ | 148 |
| 14. மிதுலா- மா | 147 |
| 15. தகிசன்- ஸ்ரீ | 147 |
| 16 கார்த்திகா- ப | 146 |
| 17. தனசிலன்- வி | 145 |
| 18. நிசாந்தன்- நி | 140 |
| 19. நிசாந்தினி- சி | 139 |
| 20 ஜனந்தினி- ஸ்ரீ | 138 |
| 21. பகீரதி- ச | 136 |
| 22. சிந்துஜா- சி | 136 |
| 23. காயத்திரி- அ | 134 |

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவிகள் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(சி/13352)

## வயோதிப மாது காயம்

நெல்லியடி. ஒக. 13

இராணுவ வாகனம் மோதியதனால் வீதியில் சென்ற வயோதிப மாது ஒருவர் படுகாயம் அடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடிகாமம் பகுதியில் இடம்பெற்றது.

கொடிகாமம் கெற்பெலியைச் சேர்ந்த பெருமாள் புஷ்பம்மா (வயது 68) என்பவரே காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

(இ-109)

## சிறுவர் முதியோர் தினவிழா

நெல்லியடி, ஒக். 13

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில்சிறுவர்—முதியோர் தினவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறும்.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ள இந்த விழாவுக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமை வகிப்பார்.

இந்த விழாவில் பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட கட்டுரை, கவிதை, சித்திரப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் இதனை அடுத்து முதியோரும் கௌரவிக்கப்படுவார்கள்.

(இ-109)

## வெள்ளைப் பிரம்பு தினம்

நெல்லியடி, ஒக். 13

வடமராட்சி லயன்ஸ் சழக அனுசரணையில் வெள்ளைப் பிரம்பு தினம் இம் மாதம் 15 ஆம் திகதி சாலை 10 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி லயன்ஸ்கழகத் தலைவர் லயன் என். சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த வைபத்தில், பிரதமவிருந்தினராகலயன்ஸ்கழக கண்பார்வைக்கான மாவட்டத் தவைலர் லயன். வி தவபாலனும், பருத்தித்துறை பிரதேச செயலரும் கலந்து கொள்வார்கள்

அன்று காலை 8 மணிக்கு வல்வெட்டித்துறையில் ஆரம்பிக்கப்படும் வெள்ளைப் பிரம்பு ஊர்வலம் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியை வந்தடையும்.

(இ-109)

## முன்பள்ளி பாலர் ஆசிரியராகப் பயிற்சி

தபால் வழி ஆறுமாதப் பயிற்சி
க.பொ.த. சாதாரண தரம் கடைசித்தகைமை

விவரங்களுக்கு:
பாலர் ஆசிரியர் சங்கம்,
(79349) கொக்குவில்.

# நினைவில் நீங்கா ஒன்பதாம் வருட நினைவஞ்சலி



தோற்றம் 17 — 03 — 1935

மறைவு 13 — 10 — 1991

## திருமதி ஞானம்மா இம்மானுவேல்

அன்பின் திருவுருவமே! பாசத்தின் பிறப்பிடமே!
எங்கள் அன்பான அம்மாவே!
நீர் மறைந்து ஆண்டுகள் ஒன்பது
சென்றாலும் எம் மனதை விட்டு
என்றும் அகலாது வீற்றிருப்பீர்!

பாசத்துடன் நினைவு கூரும் கனடாவில் வசிக்கும்,
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் சகோதரர்கள்,
மைத்துனி, மைத்துனர்கள்.

தற்காலிக முகவரி:-
க. நவரத்தினம்,
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

(79398)

# 33 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி தேவகி தியாகராசா

தோற்றம் 19 - 08 - 1933

மறைவு 11 - 09 - 2000

11 - 09 - 2000 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தாயாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலிகள், கடிதங்கள் மூலம் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் உதவிகள் வழங்கிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (13-10-2000) வெள்ளிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தி. தியாகலிங்கம் (ரஞ்சன்),
தி. தியாகசீலன் (சீலன்),
தி. தியாகச்சந்திரன் (மோகன்).

இராமலிங்கம் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(79386)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா| உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2000

| | | | |
|---|---|---|---|
| 1. மா. விஜிகரன் | — 165 | 9. மு. சிவகரன் | — 152 |
| 2. ம. சுசீதன் | — 164 | 10. தி. நிசானி | — 146 |
| 3. ஸ். சுகிர்தா | — 162 | 11. சு. ஆரணி | — 145 |
| 4. பு. ஜீவிதா | — 161 | 12. வி. பிரசாத் | — 144 |
| 5. ஜெ. ஜெனே ஜினி | 159 | 13. உ. சுமன் | — 143 |
| 6. சி. வித்தியாசாகர் | — 159 | 14. இ. தாமிரா | — 136 |
| 7. பே. கபிலேசன் | — 155 | 15. ர. சஞ்சிகா | — 135 |
| 8. பா. ஜசிந்தா | — 153 | 16. ம. தசீதா | — 135 |

கோட்ட, வலய மட்டத்தில் வகை - 2 பள்ளியில் முதலாவது இடத்தை இம் முறையும் பெற்று தனித்துவத்தை நிலை நாட்டிய 16 பேருடன் 80 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 30 செல்வங்களையும் பாராட்டுவதுடன், ஆசிரியர் தினத்தை மிகச் சிறப்பாகக்கொண்டாடி இதனால் மேலும் பெருமிதமடைந்துள்ள ஆசிரியர்களையும், அவர்களை வழி நடத்தும் முதல்வரையும் பணி சிறக்க, நீடூழி வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

— பெற்றோர்கள், ப. மா. சங்., பா. அ. சங்.

(79395)

| | யாழ். கட்சிகள் / குழுக்கள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|---|
| 1. | ஈ.பி.டி.பி. | 41,671 | 34.99% | 4 |
| 2. | தமிழர் விடுதலைக் கூட்டணி | 32,852 | 27.59% | 3 |
| 3. | ஐ.தே.கட்சி | 11,431 | 9.60% | 1 |
| 4. | அ.இ.த.காங்கிரஸ் | 10,648 | 8.94% | 1 |
| 5. | சுயேச்சை - 2 (வரதர் அணி) | 4,907 | 4.12% | 0 |
| 6. | புளொட் | 4,857 | 4.07% | 0 |
| 7. | ஐ.இ.முன்னணி | 2,452 | 2.05% | 0 |
| 8. | சுயேச்சை - 5 (முஸ்லிம்) | 2,234 | 1.86% | 0 |
| 9. | சுயேச்சை - 6 (ரெலோ) | 2,190 | 1.83% | 0 |
| 10. | சுயேச்சை - 1 (சுரேஷ் அணி) | 1,657 | 1.39% | 0 |
| 11. | சுயேச்சை - 3 (ஸ்ரீ.சு.க.) | 1,649 | 1.38% | 0 |
| 12. | தேசிய ஐக்கிய முன்னணி | 1,015 | 0.85% | 0 |
| 13. | பிரஜைகள் முன்னணி | 327 | 0.27% | 0 |
| 14. | சிஹல உறுமய | 267 | 0.22% | 0 |
| 15. | சுயேச்சை - 4 | 187 | 0.15% | 0 |
| 16. | ஜே.வி.பி. | 172 | 0.14% | 0 |
| 17. | முஸ்லிம் ஐ.வி.மு. | 161 | 0.13% | 0 |
| 18. | ருகுனு மக்கள் கட்சி | 142 | 0.11% | 0 |
| 19. | பூமிபுத்ர | 135 | 0.11% | 0 |
| 20. | லிபரல் கட்சி | 115 | 0.09% | 0 |
| | மொத்த வாக்குகள் / ஆசனங்கள் | 1,19,069 | 89.70% | 9 |
| | நிராகரிக்கப்பட்டவை | 13,664 | 10.29% | |
| | அளிக்கப்பட்ட வாக்குகள் | 1,32,733 | 21.32% | |
| | பதிவு செய்யப்பட்ட வாக்காளர் | 6,22,331 | | |


# NEW SCIENCE COLLEGE

யாழ்ப்பாணம்

**2001 - A/L**

பௌதிக இரசாயனம்

சனி, ஞாயிறு - 6.00 a.m.

**2002 - A/L**

வெப்ப இரசாயனம்

சனி, ஞாயிறு - 7.00 a.m.

ஆசிரியர்: திரு.மகேஸ்வரன் B.Sc. (Hons)

ஆரம்பம்:- 14.10.2000 சனி

(79419)


## கலட்டியில் மிதிவெடி சிறுவன் கால் இழப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ்ப்பாணம், கலட்டிப்பகுதியில் நேற்று சிறுவன் ஒருவர் மிதிவெடியில் அகப்பட்டு தனது வலது காலை முழங்காலுக்கு கீழ் இழந்தார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த இராமன் ஜெகதீசன்(வயது14) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குடும்ப நிலை காரணமாக பழைய அலுமினியப் பொருள்கள், பித்தளைக கம்பிகள் ஆகியவற்றைப் பொறுக்கி விற்பனை செய்து வந்த இந்தச் சிறுவன் நேற்றைய தினமும் தனது இளைய சகோதரனுடனும் இன்னுமொரு சிறுவனுடனும் சேர்ந்து கலட்டியில் உள்ள கைவிடப்பட்ட காவலரண் பகுதிக்கு சென்று இவற்றைச் சேகரித்துக் கொண்டிருந்த வேளையில் இந்த துயரச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது.


# COMPUTER

**உங்களிடம் கணனி இயந்திரம் இல்லையா?**

*பல தரப்பட்ட மொடல்கள்*

- PRINTER, LASER PRINTER.
- SCANER, INK CARTRIDGES.
- FLOPPY DISC, ACCESSORIES.
- PHOTOSTAT TONER POWDER.

*இன்னும் பல!*

குறிப்பு :-
எம்மிடம் ஏற்கனவே பதிவுசெய்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

*மேலும் விவரங்களுக்கு:*

**லிங்கன் ஸ்ரோர்ஸ்**

168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (C/13369)



## மணற்காடு புனித அந்தோனியார் ஆலய சிறப்பு

இந்த ஆலயம் 1850 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட புனித ஆலயமாக அமையப்பட்டது. அங்கு மணல் அகழியால் மூடப்பட்ட பின்னர் 1925ஆம் ஆண்டு புதிதாக ஆலயம் அடிக்கல் நாட்டி உருவாக்கப்பட்டது. அதில் 1934 ஆம் ஆண்டு ஆனி மாதம் 12 ஆம் திகதி முதல்திருப்பலி நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து பருத்தித்துறை பங்கின் கீழ் இணைக்கப்பட்டது. 75 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் 2000ஆம் யூபிலி ஆண்டின் புதிய சகாப்தத்தில் பங்கு ஆலயமாரகப் புத்துயிர் பெற்றுள்ளது. பங்கு மக்களாகிய நாம் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். இதேவேளை எமது ஆலயத்தை பங்கு ஆலயமாகப் பிரகடனப்படுத்திய எமது ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கு எமது மக்கள் சார்பாக மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது பங்கின் முதல்குரவ திருப்பலி அருட்தந்தை அன்ரன் ஜோர்ஜ் அவர்கள் ஒப்புக் கொடுப்பார் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**மணற்காடு**
**பங்குமக்கள்**

(C/13370)



# பாராட்டு

**தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவி**



செல்வி **வி.ஜலசா** அவர்கள்

இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். பெற்றோரை இழந்த இப்பிள்ளைக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. மகளிர் இல்லத்தில் கடந்த ஆண்டுகளிலும் இரு பிள்ளைகள் சித்தி பெற்று உயர் கல்வி கற்று வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.




கலாநிதி **தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்,
துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை.

(C/13372)



# நன்றி கூறுகிறோம்

தந்தையின் இலட்சியப் பாதையில்
தமிழர் தம் உரிமைகளை
வென்றிட
முன்னாள் நாடாளுமன்ற
உறுப்பினர்கள்
மூவரையும் மீண்டும்
தேர்ந்தெடுத்த
வாக்காளர்கள்
அனைவருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள்!



வீ.ஆனந்தசங்கரி



மாவை சேனாதிராசா



சி.சிவமகாராசா

யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள்
தமிழர் விடுதலைக் கூட்டணி

(C/13375)



யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை மாணவர்களை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவர்களான

| | | |
|---|---|---|
| புவிராஜ் இரோஷன் | - | 164 |
| சிவராஜா தர்சிகா | - | 163 |
| இரத்தினராஜா ஹஜேந்தனன் | - | 152 |
| சிவானந்தன் டுஸ்யந்தன் | - | 151 |
| சிவராசா பிரதீபன் | - | 142 |
| மகேந்திரா லிறோஜினா | - | 138 |

ஆகியோருடன் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களான

| | | |
|---|---|---|
| மனோகரன் கஜன்ராஜ் | - | 133 |
| சின்னராசா திர்சிகாயினி | - | 130 |
| நடேசன் பிரதீபா | - | 129 |
| தங்கராஜா தனுஜா | - | 127 |
| பத்மராசா வத்சலா | - | 127 |
| இராசதுரை கஜதர்சன் | - | 125 |

ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களின் சிறந்த பெறுபேற்றுக்காய் தங்களை அர்ப்பணித்துக் கல்வி புகட்டிய அதிபர், ஆசிரியர்களையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

- பெற்றோர்கள்

(79414)

## —யாழ்., கிளிநொச்சி, கண்டி, மாவட்டங்களில்—

# வாக்களிப்பை ரத்துச் செய்யும் கோரிக்கையை ஏற்பதற்கு தேர்தல் ஆணையாளர் மறுப்பு!

கொழும்பு,ஒக்.13

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் கண்டி மாவட்டங்கள் உட்பட பல மாவட்டங்களில் இடம்பெற்ற வாக்களிப்பை ரத்துச் செய்யும்படி பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் விடுத்த கோரிக்கையை தேர்தல் ஆணையாளர் நிராகரித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா சகல கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் தலைவர்களை நேற்று கொழும்பில் தமது அலுவலகத்தில் சந்தித்து பேச்சு நடத்தினார்.

அப்போதே மேற்கண்ட விடயம் தொடர்பாக கட்சித் தலைவர்கள் விடுத்த கோரிக்கையை அவர் நிராகரித்தார்.

பொதுத்தேர்தலின் இறுதி முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கு முன்னர் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்பின்போது தேர்தல் தினத்தன்று இடம்பெற்ற சம்பவங்கள் குறித்துக் கட்சிப் பிரதிகளின் கருத்துக்களைத் தேர்தல் ஆணையாளர் கேட்டு அறிந்து கொண்டார்.

22 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்புச் செல்லுபடியற்றதாக் கப்பட்டிருப்பதாகவும். இந்தச் சந்திப் பின்போது தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். இந்த 22 நிலையங்களில் 13 நிலையங்கள் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவையாகும்.

ஏனையவை நுவரெலியா, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, கேகாலை மாவட்டங்களில் உள்ளன. குறிப்பிட்ட சில இடங்களில் நடைபெற்ற சில சம்பவங்கள் மாவட்ட இறுதித் தேர்தல் முடிவுகளில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த மாட்டாது என்பதால் வாக்களிப்பை ரத்துச் செய்யும் கோரிக்கையை தாம் ஏற்கவில்லையென்றும் தேர்தல் ஆணையாளர் கூறினார்.

இதே சமயம் கண்டி மாவட்டத் தேர்தல் இறுதி முடிவுகள் நேற்று மாலை உத்தியோக பூர்வமாக தேர்தல் செயலகத்தால் வெளியிடப்பட்டன.

இதன்படி பொ.ம.ஐ.முன்னணி 2 இலட்சத்து 82 ஆயிரத்து 282 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. ஐ.தே. கட்சி 2 இலட்சத்து 43 ஆயிரத்து 623 வாக்குகளைப் பெற்று 5 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. ஜே.வி.பி. 32 ஆயிரத்து 23 வாக்குகளுடன் 1 ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளது.

இதற்கிடையில் கண்டியில் தொடரும் பதற்ற நிலை காரணமாக மாநகர சபை பிரிவிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்று முழுநாளும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்தது.

தமிழ், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான வியாபார நிலையங்களுக்கு முன்னால் பொலிஸாரும், இராணுவத்தினரும் நேற்று முழு நாளும் கூட்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (இ-9-7-8)

## கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகள்

| கட்சி | மொத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| பொ.ஐ.மு. | 39,009,01 | 45.10 |
| ஐ.தே.க. | 34,777,70 | 40.21 |
| ஜே.வி.பி. | 5,18,774 | 5.99 |
| தே.ஐ.மு. | 1,97,983 | 2.28 |
| சிஹல உறுமய | 1,27,863 | 1.47 |
| த.வி.கூட்டணி | 1,06,033 | 1.22 |
| ஈ.பி.டி.பி. | 50,890 | 0.58 |
| புதிய இடதுசாரி முன். | 32,275 | 0.37 |
| தமிழ்க் காங்கிரஸ் | 27,323 | 0.31 |
| ரெலோ | 26,112 | 0.30 |
| **1994 ஓகஸ்ட் தேர்தல்** | | |
| பொ.ஐ.மு. | 38,87,823 | 48.94 |
| ஐ.தே.க. | 34,983,70 | 44.04 |
| ஸ்ரீ.முஸ்.காங்கிரஸ் | 1,43,307 | 1.80 |
| த.வி.கூட்டணி | 1,32,461 | 1.67 |
| ஸ்ரீ.முன்னேற்ற முன்னணி | 90,078 | 1.13 |
| ம.ஐ.முன்னணி | 68,538 | 0.86 |
| சுயேச்சை (நுவரெலியா) | 27,374 | 0.34 |
| ரெலோ | 26,087 | 0.33 |
| புளொட் | 11,567 | 0.15 |
| சுயேச்சை - 2 (யாழ்.) | 10,744 | 0.14 |

## உயிரிழப்பு

வவுனியா,ஒக்.13

தனங்களப்புப் பகுதியில் நேற்று முன்தினம் படையினருடன் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் விடுதலைப் புலி உறுப்பினரான 2 ஆம் லெப்டினன்ட் அருமை நல்லவன் (அருள்வாணந்தம் சுதர்சன் - யாழ்ப்பாணம்) உயிரிழந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

இதே தினம், முல்லைத்தீவில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் எல்லைப்படை வீரரான பிந்து (நாகரத்தினம் பிரியரஞ்சினி - பரந்தன்) என்பவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-9)

## அமைச்சர்கள் பலர் தேர்தலில் தோல்வி!

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் முக்கிய அமைச்சர்கள், பிரதிஅமைச்சர்கள் எனப் பலர் தோல்வியைத் தழுவிக்கொண்டனர்.

வர்த்தக, வாணிப அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரட்ண, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் டி.பி.விக்கிரமசிங்க, கப்பல் துறை அமைச்சர் நந்தா மத்தியூ, மகளிர் விவகார அமைச்சர் ஹேமா பியசிலி ரத்னாயக்கா ஆகியோரும் -

பிரதி அமைச்சர்களான நிருபமா ராஜபக்ஷா, அத்துல நிமலசிறி ஜெயசிங்க, பேராசிரியர் விஸ்வ வர்ணபால, பேராசிரியர் ஏ.வி.சுரவீர ஆகியோரும் - தோல்வியடைந்தவர்களில் அடங்குவர்.

முஸ்லிம் காங்கிரஸ் துணைத் தலைவர் ரவூப் ஹக்கீம் கண்டி மாவட்டத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

### அரசுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவு தேவை என்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரு நிபந்தனைகளும் ஏற்கப்படும் பட்சத்தில் கட்சியின் உயர் பீடம் கூடி அது குறித்து பரிசீலனை செய்து முடிவு செய்யும்.

எமது நிபந்தனைகளை நிறைவேற்ற முன்வரும் அரசுக்கு ஆதரவு வழங்குவோம். நிபந்தனைகளை நிறைவேற்ற அவர்களுக்கு அவகாசமும் வழங்குவோம். அந்த அவகாசத்துக்குள் தீர்வைக்காண எதிர்க் கட்சியில் இருந்து எமது பங்களிப்பை வழங்குவோம்.அரசில் பங்காளியாக இருக்கமாட்டோம்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

### புதிய அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நேற்றுமாலை ஜனாதிபதி சந்திரிகாவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசினார். பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு அமைக்க முழு ஆதரவு தருவதாக டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்ததாக தகவல பணிப்பாளரின் அறிக்கை தெரிவிக்கிறது.

இதேவேளை தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர்களை நேற்று நள்ளிரவு ஜனாதிபதி சந்தித்துப் புதிய அரசுக்கு ஆதரவு வழங்குவது குறித்து பேச்சு நடத்த இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய ஒரு பின்னணியிலேயே ஜனாதிபதி புதிய அரசாங்கத்தை இன்று (வெள்ளிக்கிழமை) அமைக்குமாறு ரத்னசிறி விக்கிரமநாயக்காவுக்கு அழைப்பு விடுத்தார் என்று ஆரிய ரூபசிங்காவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது

### தெரிவான..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, விகிதாசார அடிப்படையில் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தேசியப்பட்டியல் உறுப்பினர்களை நியமிக்கும் பொறுப்பு அந்தந்தக் கட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கட்சிகள் தத்தம் தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர்களைச் சமர்ப்பித்ததுடன் அவை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (இ-9)

### ஏறாவூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிம் காங்கிரஸ் ஆதரவாளர் ஒருவரும் கத்திவெட்டுக் காயங்களுக்கு உள்ளாகி மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இதற்கிடையில் காத்தான்குடிப் பகுதியில் நேற்று முற்பகல் 10மணி தொடக்கம் மறுஅறிவித்தல் வரை ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்கும் என மட்டக்களப்பு அரச அதிபர் ஆர்.மோனகுருசாமி அறிவித்துள்ளார். (இ-7-21)

### 22 தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பில் பொ.ஐ.மு. சார்பில் ஒருவரும், த.வி.கூட்டணி சார்பில் இரண்டு பேரும் -

அம்பாறையில் சுயேச்சைக்குழு சார்பில் ஒருவரும் -

மலையகத்தில் ஐ.தே.க. சார்பில் இருவரும் பொ.ஐ.முன்னணி சார்பில் மூன்று பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசியப்பட்டியல் மூலம் தெரிவான எம்.பிக்களின் பெயர்கள் அறிவிக்கப்படும் போது இந்த எண்ணிக்கை 25 ஆக அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-9)

### ரணிலுக்கே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்து 668 வாக்குகளைப் பெற்றார். அதே மாவட்டத்தில் போட்டியிட்ட பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் 1 லட்சத்து 39 ஆயிரத்து 123 வாக்குகளைப் பெற்றார்.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க களுத்துறை மாவட்டத்தில் 1 லட்சத்து 46ஆயிரத்து 705 வாக்குகளையும் சுசில் பிரேமஜயந்த் கம்பஹா மாவட்டத்தில் 1லட்சத்து 65 ஆயிரத்து 900 வாக்குகளையும் ஐ.தே.கட்சித் தவிசாளர் கரு ஜய சூரிய அதே மாவட்டத்தில் 2லட்சத்து 37ஆயிரத்து 397வாக்குகளையும் பெற்றுள்ளனர். (இ-8)

### கட்சிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இந்தக்கட்சிகள் கொள்கை அளவில் ஆதரவு வழங்க முன்வந்துள்ளன. அவை சில நிபந்தனைகளை விதித்துள்ளன. அந்த நிபந்தனைகள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம்" என்று ஐ.தே.க பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

"ஜே.வி.பி. அமைப்பின் தலைவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளோம். அவர்கள் இரு நிபந்தனைகளை விதித்துள்ளனர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல், ஒன்றரை வருட காலத்தில் தேர்தல் நடத்துதல் ஆகிய இரு நிபந்தனைகளை அவர்கள் விதித்துள்ளனர். அவை குறித்து ஆராயப்படுகின்றது." என்று அவர் தெரிவித்தார்.

'தேசிய ஐக்கிய முன்னணித் தலைவர்களுடன் ஐ.தே.க. தலைவர்கள் நேற்றுப் பேச்சு நடத்தியுள்ளனர். அவற்றின் முடிவுகள் உடனடியாக வெளியிட முடியாதுள்ளது.' என்றும் அவர் சொன்னார்.' (இ-5)


இன்றைய வீடியோ CD வெளியீடு

சூர்யா, ஜோதிகா

*உயிரிலே கலந்தது

மூர்த்தி வீடியோ

மானிப்பாய் (C/13376)



நாளை ஆரம்பம்...!

A/L 2002

பிரிவு II

"சொத்து முடிவு செய்தல்"

1 மணி

கணக்கீடு

D.SAM

DMI

யாழ்நகர்.

(C/13336)



இன்றைய வீடியோ CD வெளியீடு

சூர்யா, ஜோதிகா

*உயிரிலே கலந்தது

(பிரதிகள் 2உடன் பெற்றுக்கொள்ளலாம்)

விஷ்ணு வீடியோ

கே.கே.எஸ்.றோட், கோண்டாவில்

(79429)



குறை விளக்கம் பெற்றவர்கள் நிறை விளக்கம் பெற்றிட

கணக்கீடு

திரு. பாலவாசன்

B.B.A.(F.M.Spl)

A/L 2001

குறைநாதக் கணக்கு

ஆரம்பம்: நாளை காலை 8 மணி

விக்னா கல்வி நிறுவனம்

(79396)



## வட இலங்கை சங்கீத சபை தேர்வு - 2001

(1) மேற்படி தேர்வுக்கான விண்ணப்பப் படிவங்கள் 10.10.2000ஆம் திகதி தொடக்கம் யாழ்.மாவட்டத் தேர்வுநாடிகள் சபைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(2) படிவம் ஒன்றின் விலை 20 ரூபா மட்டும்.

(3) சகலதேர்வுநாடிகளும் அறிவுறுத்தலுக்கு அமைவாக விண்ணப்பத்தைப் பூரணப்படுத்தி அனுப்பிவைக்கவும்.

(4) விண்ணப்ப முடிவுத் திகதி 10.12.2000ஆம் திகதி ஆகும்.

திருமதி செ.மகாலிங்கம்.

கல்விப் பணிப்பாளரும், வட இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்

வட. இலங்கைச் சங்கீத சபை,

யாழ்.கல்விவலயம், யாழ்ப்பாணம்.

10.10.2000

(C/13358)



## நன்றியுடன் வணக்கங்கள்



எவ்வளவோ இன்னல்கள், பயமுறுத்தல்கள் மத்தியிலும் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமது கட்சிக்கு ஆதரவு நல்கிய வாக்காளர்களுக்கு எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி

தலைவர்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்.

(79402)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி [illegible]ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.